THIRUMARAI AASAAN
S. Rajanayagam
Editor
86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.
PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385
Pleading for the restoration of pure New Testament Christianity
Vol. 30 June 2017 Issue - 6

ஆசிரியர் உரை

# கிறிஸ்தவ வாழ்வுக்கான வைராக்கியம்

**வை**ராக்கியம் என்பது ஒரு காரியத்தில் உறுதியாயிருந்து அதைச் செய்து முடிப்பதில் அதீத ஆர்வம் காட்டுவது. ஒரு வேளை இவ்வார்த்தைக்கான பொருளை நாம் ஓரளவு அறிந்திருந்தாலும், நம்முடைய நடைமுறை வாழ்க்கையின் பல நிலைகளில் இவ்வார்த்தையின் அர்த்தத்தைப் பெரிதாக அப்பியாசப்படுத்துவதில்லையென்பது யதார்த்தம். மொத்தத்தில், அநேகராகிய நாம் நம்முடைய வாழ்க்கையைப் பொத்தாம் பொதுவிலும், போகிற போக்கிலும், பட்டும் படாமலுமே நகர்த்திக் கொண்டும், நடத்திக் கொண்டும் உள்ளோம். மானிடராகிய நாம் இவ்வார்த்தையின் தாக்கத்தைப் புரிந்துகொள்ள வேண்டிய அளவுக்குப் புரிந்து கொள்ளாவிட்டாலும், பரலோகத்தின் தேவனும், பரிசுத்த வேதாகமமும் இவ்வார்த்தையின் அவசியத்தை வலியுறுத்தாமலில்லை. ஆம், தேவன் தன்னை வைராக்கியமுள்ள தேவன் ( ஏசாயா 9 : 7 ) என்று ஏசாயா தீர்க்கனைக் கொண்டு பேசியிருக்கிறார்.

பினெகாஸ் போன்ற தேவமனிதர்கள் தங்கள் பக்தியில் வைராக்கியமுள்ளவர்களாகவே வாழ்ந்திருக்கிறார்கள் (எண் 25 : 9 – 11). அப்போஸ்தலனாகிய பவுலடியார், விசுவாசத்தில் தான் பெற்ற உத்தமக் குமாரர்களில் ஒருவனாகிய தீத்துவுக்கு எழுதின நிருபத்தில், இயேசு ஆண்டவர் எதற்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார் என்ற காரணத்தை இவ்விதம் கூறியுள்ளார். **அவர் நம்மைச் சகல அக்கிரமங்களினின்று மீட்டுக்கொண்டு, தமக்குரிய சொந்த**

**ஜனங்களாகவும், நற்கிரியைகளைச் செய்யப் பக்தி வைராக்கிய முள்ளவர்களாகவும் நம்மைச் சுத்திகரிக்கும்படி, நமக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்** என்று (தீத்து 2 : 14). இதன் மூலம், கிறிஸ்தவ வாழ்வுக்குப் பக்தி வைராக்கியம் அவசியம் என்பது கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது. ஆயினும், கிறிஸ்துவுக்குள்ளான வாழ்வில் நம்மிடம் பக்தி வைராக்கியம் காணப்படுகிறதா என்பது ஓர் இமாலயக் கேள்வியாகவே உள்ளது.

அநேகராகிய நாம் பக்தியில் வைராக்கியமாய் இருப்பதற்கு எவைகளை நோக்க வேண்டுமோ அவைகளை நோக்காமல், வைராக்கியத்திற்கு எவைகள் தடையாயிருக்கிறதோ அவைகளில் சிந்தையைச் செலுத்திக் கொண்டுள்ளோம். ஆம், அப்படித்தான் இருக்கிறோம் என்பதைச் சரியாகப் புரிந்துகொள்வதற்கு ஏதுவாக பழைய ஏற்பாட்டுச் சம்பவம் ஒன்றை உங்கள் மனக் கண்களுக்கு முன்பாகக் கொண்டுவர விரும்புகிறேன். இதற்காக நாம் பழைய ஏற்பாட்டின் எண்ணாகமம் புத்தகத்திற்குச் செல்லுவோம்.

அதற்கு முன்பாக, நமது வழக்கத்தின்படி இந்நூலின் பின்னணி பற்றிக் கொஞ்சம் பார்த்து விடுவோம்.

சொந்தப் புத்தியும், சொல்லுப் புத்தியும் இல்லாத இஸ்ரவேல் மக்கள் ஒரு நாற்பது ஆண்டுகள் வனாந்திரத்தில் சுற்றி அலைந்தது பற்றிப் பேசும் நூல் தான் எண்ணாகமம். புத்தியும், பக்தியும் இவர்களிடம் இல்லாவிட்டாலும், இவர்களையுமறியாமல் ஒரு சாதனையைச் சத்தமில்லாமல் நிகழ்த்தியிருக்கிறார்கள். சோதனை நிறைந்த அச்சாதனை இவர்களுக்குப் பெருத்த வேதனையைத் தந்திருந்தாலும் சாதனை சாதனைதானே! அப்படியென்ன சாதனை என்கிறீர்களா? 11 நாளில் கடக்க வேண்டிய தூரத்தை முடிப்பதற்கு 40 ஆண்டுகள் எடுத்துக் கொண்டார்களே இது அவர்களது சாதனை இல்லையா?

எண்ணாகமம் என்பது ஒரு காரணப் பெயர். இஸ்ரவேல் மக்கள் வனாந்திர பயணத்தில் இரண்டுமுறை இலக்கம் பார்க்கப்பட்டதால் இப்பெயர் வந்துள்ளது. 1. சீனாய் மலைப் பகுதியில். 2. மோவாபின் சமவெளிகளில். இந்நூலின் காரியங்கள் ஆரம்பமாகும் போது, இஸ்ரவேல் மக்கள் எகிப்திலிருந்து விடுதலை பெற்று வந்து 13 மாதங்களே ஆகியிருந்தது. தேவனுடைய ஜனங்கள் தங்கள் வாழ்வில் பொறுப்பற்ற முறையில் நடந்து, தவறான முடிவுகள் எடுப்பதின் விளைவுகள் எப்படியாக இருக்கும் என்று தேவன் இந்நூலில் பாடம் நடத்தியிருக்கிறார். ஆகவே தான், எகிப்திலிருந்து புறப்பட்டு வந்த **பழைய தலைமுறையினரோடு** இந்நூல் ஆரம்பமாகி (1 : 1 -10 : 10 ) வனாந்தரத்தில் பிறந்து வளர்ந்து கானானுக்குள் பிரவேசிக்க ஆயத்தமாயிருந்த புதிய தலைமுறையினரோடு இந்நூல் நிறைவடைகிறது (எண். 26 : 36).

இப்படிப்பட்ட நூலின் 13, 14-ம் அதிகாரங்களைத் தான் இம்மாதத்திற்காக நாம் எடுத்துக் கொண்டுள்ளோம்.

தேவன் மோசேயைக் கொண்டு சீனாய் மலையில் பிரமாணங்களைக் கொடுத்து கொஞ்ச காலமே ஆகியிருந்த காலகட்டம் அது. கானானுக்குள் பிரவேசித்து அதைச் சுதந்தரித்துக் கொள்ளுங்கள் என்ற தேவகட்டளையும் ஒருவகையாக அப்பொழுது வந்துவிட்டது. அங்கே, மோசே கோத்திரத்துக்கு ஒருவராக 12 பேரைத் தெரிந்துகொண்டு, தேசத்தைச் சுற்றிப்பார்க்கும்படி அனுப்பினான் (எண். 13 : 1 - 16). இந்தப் 12 பேரும் தேசத்துக்குள் பிரவேசித்து, எத்திக்கிலும் பயணித்து, தேவையான தகவல்களைச் சேகரித்து 40 நாட்களுக்குப் பிறகு திரும்பி வந்து, பாரான் வனாந்தரத்திலுள்ள காதேசில் மோசேக்கும், ஆரோனுக்கும், சபையாருக்கும் ஆதாரங்களோடு அறிக்கை சமர்ப்பித்தார்கள்.

இதுவரைக்கும் இணைந்து பணியாற்றிய இப்பன்னிரெண்டு பேர், இந்த இடத்தில் 10 – 2 என்று இரண்டு அணியாகப் பிரிந்து விட்டார்கள். ஆம், பத்துப் பேர், **மோசேயை நோக்கி: நீர் எங்களை அனுப்பின தேசத்துக்கு நாங்கள் போய் வந்தோம்; அது பாலும் தேனும் ஓடுகிற தேசந்தான்; இது அதினுடைய கனி. ஆயினும் அந்த தேசத்திலே குடியிருக்கிற ஜனங்கள் பலவான்கள்; பட்டணங்கள் அரணிப்பானவைகளும் மிகவும் பெரியவைகளுமாயிருக்கிறது; அங்கே ஏனாக்கின் குமாரரைக் கண்டோம். அமலேக்கியர் தென்புறமான தேசத்தில் குடியிருக்கிறார்கள். ஏத்தியரும், எபூசியரும், எமோரியரும் மலைநாட்டில் குடியிருக்கிறார்கள்; கானானியர் கடல் அருகேயும் யோர்தானண்டையிலும் குடியிருக்கிறார்கள் என்றார்கள்** (13 : 27 - 29). இவர்கள் பரப்பின இத்துர்ச்செய்தி இஸ்ரவேலரைப் பீதியடையச் செய்தது. அவர்கள் கூக்குரலிட்டுப் புலம்பி, இராமுழுவதும் அழுது தீர்த்தார்கள். இதன் உச்சமாக கர்த்தர் எங்களை இந்த தேசத்துக்குக் கொண்டு வந்தது என்ன? எகிப்துக்குத் திரும்பிப் போகிறதே எங்களுக்கு உத்தமம் அல்லவா என்றதோடு, நாம் ஒரு தலைவனை ஏற்படுத்திக்கொண்டு திரும்பிப் போவோம் வாருங்கள் என்று ஒருவரோடொருவர் சொல்லிக் கொண்டார்கள் (13:3,4).

இவை எல்லாவற்றையும் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்த இருவர் அணியைச் சேர்ந்த யோசுவாவும், காலேபும் தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு, **இஸ்ரவேல் புத்திரரின் சமஸ்த சபையையும் நோக்கி: நாங்கள் போய்ச் சுற்றிப் பார்த்துச் சேர்ந்த தேசம் மகா நல்ல தேசம். கர்த்தர் நம்மேல் பிரியமாயிருந்தால், அந்தத் தேசத்திலே நம்மைக் கொண்டுபோய், பாலும் தேனும் ஓடுகிற இந்த தேசத்தை நமக்குக் கொடுப்பார், கர்த்தருக்கு விரோதமாக மாத்திரம் கலகம் பண்ணாதிருங்கள்** என்றார்கள் (13 : 6 - 9).

கோத்திரத்திற்கு ஒருவராக அனுப்பப்பட்ட வேவுகாரர்கள் எல்லோருக்கும் ஒரேவிதமான வேலைதான் கொடுக்கப்பட்டது. எல்லோரும் ஏகமாகவே கானானைச் சுற்றித் திரும்பி வந்தார்கள். ஆயினும், இருவரின் செய்கையில் ஏற்றமும், அந்தப் பத்துப் பேரின் அணுகுமுறையில் ஏமாற்றமும் வந்ததே அது எதினால்? நூனின் குமாரனாகிய யோசுவாவுக்குள்ளும், எப்புன்னேயின் குமாரனாகிய காலேபுக்குள்ளும் இருந்த விசுவாசமும், வைராக்கியமும் இந்தப் பத்துப்பேரிடம் காணாமல் போய்விட்டதே அது எதினால்? இதைக் கண்டுபிடிப்பதற்கு பெரிய மேதாவித்தனம் ஒன்றும் தேவையில்லை. எப்படியெனில், கர்த்தர் பேரிலும், கர்த்தரின் காரியத்திலும் இந்த இரண்டு பேரிடம் வைராக்கியம் மிகுந்து காணப்பட்டது. இந்தப் பத்துப்பேரிடம் கர்த்தரின் காரியமாக வைராக்கியம் என்பது மருந்துக்குக் கூட இல்லை. அவ்வளவு தான் வேறென்ன ?

ஏன் இவர்களுக்கு வைராக்கியம் இல்லாமற் போயிற்று? என்னதான் காரணம்? கானானுக்குள் அனுப்பத் தெரிந்துகொண்ட போது, இவர்கள் தேவனுக்குப் பயந்தவர்களாகவும், மோசேயின் நம்பிக்கைக்குரியவர்களாகவும், கொடுத்த பணியைச் சிறப்பாக நிறைவேற்றுகிறவர்களாகவும் தானே காணப்பட்டார்கள்! திரும்பி வந்து யோசுவா, காலேப்போடு சேர்ந்து இவர்களும் நல்ல செய்தியைத் தானே சொன்னார்கள். உண்மைதானே, அப்படியானால் என்ன நடந்தது இடையில்? இவர்களின் வைராக்கியம் ஏன் மற்ற இரண்டு பேரைப் போல் இல்லாமற் போனது? இப் பத்துப்பேரின் வைராக்கியத்திற்குத் தடையாக மாறியவை எவை?

சரி, இவைகளைத் தெரிந்துகொள்ள நம்முடைய ஆதார வசனங்களுக்குள்ளாக நாம் சென்று வருவோம். இதன் மூலம் நம்முடைய பக்தி வாழ்வுக்குக் கிடைக்கும் பாடங்கள் என்னவென்றும் கற்றுக் கொள்வோம்.

### I தடையாயிருப்பவைகளைக் கண்டு கலங்கினார்கள் (13 : 31-33)

யோசுவா, காலேப் வைராக்கியம் போலல்லாமல், இந்தப் பத்துப்பேரின் வைராக்கியம் கரைந்து காணாமல் போனதற்கான காரணங்களில் முதலாவதாக, இவர்கள் எதிரிகளின் பலத்தைக் கண்டு மலைத்துப் போனதைக் கூறலாம்.

சொத்தையாகிப்போன இந்தப் பத்துபேரின் கூற்றைப் பாருங்கள். ஜனங்கள் இராட்சதப் பிறவிகளாம் மற்றும் பட்டணங்கள் அரணிப்பானவைகளாம். இருக்கட்டுமே அதினாலென்ன? 13 : 1-ல், தேவன் மோசேயிடம் **நான் இஸ்ரவேல் புத்திரருக்குக் கொடுக்கும் கானான் தேசம்** என்று முடிவெடுத்துச் சொல்லிவிட்டார். இதன் பிறகு, இஸ்ரவேலருக்குக் கானான் தேசத்தைக் கொடுக்க வேண்டியது தேவனுடைய வேலை. அங்கே இராட்சதர்கள் வாழ்ந்தாலென்ன

பட்டணங்கள் அரணிப்பாய் இருந்தாலென்ன? அது அவர் வேலையாயிற்றே. வாக்குக் கொடுத்தவர் வாக்கை நிறைவேற்ற வல்லவராக இருக்கிறார் என்று நம்பி அவரை நோக்கிப் பார்க்காமல், ஏன் மனிதர்களைப் பார்க்கவேண்டும்? அன்றைக்கு வல்லரசாக இருந்த எகிப்து தேசத்துப் பார்வோனின் சேனையைக் காட்டிலுமா கானானின் குடிகள் பலவான்கள். தேவன் அவர்களையே நடுக்கடலில் அழிந்து போகச் செய்யவில்லையா? இந்த உண்மை இவர்கள் அறியாததா ?

கிட்டத்தட்ட இதே விதமான தவறைத் தான் பேதுரு தன் வாழ்வின் ஒரு கட்டத்தில் செய்தான். தரையில் நடப்பது போல் இயேசு தண்ணீரில் நடந்து வந்தார். அதைக் கவனித்த பேதுரு, நானும் ஜலத்தின் மேல் நடந்து உம்மிடத்தில் வரக்கட்டளையிடும் என்றான். இயேசுவும் **வா** என்றார். இவனும் நடந்தான். ஆனால், இயேசுவின் வாக்கை நம்பி நடந்தவன், தொடர்ந்து இயேசுவை நோக்கியே நடக்காமல், காற்று பலமாயிருக்கிறதைக் கண்டு பயந்ததினால் அமிழ ஆரம்பித்தான். காற்று எப்படி அடித்தால் இவனுக்கென்ன? **வா** என்றவர் இயேசு. அவரை நோக்கி வீறு நடைபோட வேண்டியது தானே! தவறு செய்தான், விலை கொடுத்தான்!

அருமையானவர்களே இதுபோல் தான், நம்முடைய பக்தி வாழ்க்கையில் தேவனையும், அவருடைய வார்த்தைகளையும் நம்பாமல், தடைகளைப் பார்க்கிறவர்களாகவும், அவைகளைப் பெரிதாக எண்ணுபவர்களாகவும் இருப்போமானால் தேவனுக்கடுத்த காரியங்களில் தேவையான வைராக்கியம் காட்ட முடியாது. பக்திவாழ்வின் சவாலான நேரங்களில் தாவீதின் சிந்தையை நாம் பெற்றுக்கொள்வது அவசியம். **உம்மாலே நான் ஒரு சேனைக்குள் பாய்ந்து போவேன். என் தேவனாலே ஒரு மதிலைத் தாண்டுவேன் என்று ( சங் : 18 : 29 ).** தேவனாலே நாம் எதையும் சாதிக்க முடியும். பவுலடியாரும் இக்கருத்தை ஆதரிக்கிறார் (பிலிப்பியர் 4 : 13).

கர்த்தருக்கான வாழ்க்கையில் தடைகளையும், தடைகளின் அளவையும் பாராமல், தாவீது, பினெகாஸ் போல் வைராக்கியம் பாராட்டினால்தான் ஏராளமாய்ப் பெருகிவிட்ட கள்ளப் போதகர்களையும், அவர்களால் அவிழ்த்து விடப்பட்டிருக்கிற கள்ள உபதேசங்களையும் எதிர்த்து வெற்றி பெற முடியும். தேவனுக்கும் அவருடைய வார்த்தைகளுக்கும் என்றென்றும் வல்லமை உண்டு.

ஆகையால், கர்த்தரிலும் அவருடைய வார்த்தையிலும் நம்பிக்கை வைத்து, தடைகள் யார் மூலமாக வந்தாலும், எந்த ரூபத்தில் வந்தாலும், எவ்வளவு பெரிதாகத் தெரிந்தாலும் அது பற்றிக் கவலைப்படாமல், கிறிஸ்துவுக்காகவும், அவருடைய உபதேசத்துக்காகவும், அவர் வாக்களித்துக் கட்டின ஒன்றான மெய் சபைக்காகவும் ( மத் 16 : 18 ) வைராக்கியம் பாராட்டி வாழ்வோம்.

**II. தேவனைக் காட்டிலும் மனிதர்களுக்குப் பயந்தார்கள் (14 : 1 – 3)**

யோசுவா, காலேப் வைராக்கியம் போலில்லாமல், இந்தப் பத்துப்பேரின் வைராக்கியம் மங்கி மறைந்து போனதற்கான இரண்டாவது காரணமாக, இவர்கள் தேவனுக்குப் பயப்படாமல், மனிதர்களுக்குப் பயப்பட்டதைக் கூறலாம்.

இந்தப் பத்துப்பேர் பரப்பின துர்ச்செய்தியை கேட்டு, **சபையார் எல்லாரும் கூக்குரலிட்டுப் புலம்பி, இராமுழுவதும் அழுதுள்ளார்கள் (14 : 1). சாவதற்கு எதற்காக இங்கு வரவேண்டும், பேசாமல் எகிப்து தேசத்திலேயே இருந்திருக்கலாமே என்று மோசேக்கும், ஆரோனுக்கும் விரோதமாக முறுமுறுக்க ஆரம்பித்து விட்டார்கள்** (4 : 2). அவர்களின் அப்போதைய நினைப்பு **எல்லாம் முடிந்து விட்டது** என்பது. ஆனால், உண்மையில் எதுவுமே நடக்கவில்லை. அங்கே கூக்குரலுக்கும், புலம்பலுக்கும், அழுகைக்கும் அவசியமே இல்லை. ஆனால், எல்லாம் அரங்கேறி உள்ளது.

பரத்துக்கான வாழ்க்கையில் ஒரு தெளிவு எப்பொழுதும் தேவை. **யாருக்குப் பயப்படவேண்டும், யாருக்குப் பயப்படக்கூடாது** என்பதில். இப்படிப்பட்ட தெளிவு இயேசுவின் நாட்களில் இல்லாமல் போனபடியால் தான், **ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாயிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்படவேண்டாம், ஆத்துமாவையும், சரீரத்தையும் நரகத்தில் அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள் என்று** எச்சரித்துள்ளார் ( மத் 10 : 28 ). தேவனுக்குப் பயந்து, அவருடைய கற்பனைகளைக் கைக்கொகொள்வது தான் காரியத்தின் கடைத்தொகை என்று ஞானி சாலமோன் கூறியுள்ளார் ( பிரசங்கி 12: 13 ). எந்தச் சூழ்நிலையிலும் ஒருவன் தேவ காரியத்தில் மனிதனுக்குப் பயப்படக்கூடாது. அப்படிப் பயப்பட வேண்டிய அவசியமில்லை. தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாய் யாரும் இருக்க முடியாது (ரோமர் 8 : 31).

இதைவிட மோசமான சூழ்நிலையை, இதே இஸ்ரவேலர்கள் எகிப்திலிருந்து புறப்பட்டு வந்தபோது எதிர்கொண்டார்கள். ஆம், வேறுவழியே இல்லாமல் இஸ்ரவேலரைத் துரத்திவிட்ட பார்வோனின் இருதயம் மீண்டும் கடினமானபடியால், அவர்களைத் திருப்பிக் கொண்டு வர பலத்த கையுடன் புறப்பட்டான் (யாத்.14:8). குதிரைகள், குதிரை வீரர்கள், சேனைகள், இரதங்கள் என்று ஏக அமர்க்களமாகப் பின் தொடர்ந்து, ஈரோத் பள்ளத்தாக்கண்டையில் நெருங்கி விட்டார்கள். அங்கே, இஸ்ரவேல் புத்திரர் பயந்து போனார்கள். **எகிப்திலே பிரேதக் குழிகள் இல்லையென்றா வனாந்திரத்திலே சாகும்படிக்கு எங்களைக் கொண்டு வந்தீர்?** என்று மோசேயிடம் எகிறினார்கள் (14:10-12). **அப்பொழுது மோசே ஜனங்களை நோக்கி : பயப்படாதிருங்கள்; நீங்கள் நின்றுகொண்டு இன்றைக்குக் கர்த்தர் உங்களுக்குச்**

**செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள்; இன்றைக்கு நீங்கள் காண்கிற எகிப்தியரை இனி என்றைக்கும் காணமாட்டீர்கள்** (14:13) என்றான். அங்கே மோசேயின் நம்பிக்கை வீண் போகவில்லை.

ஆனால், அருமையானவர்களே! நாம் எப்படி? மோசே, யோசுவா காலேப் போன்று தேவனுக்குப் பயந்து, அவர் மீது நம்பிக்கை வைத்து நெஞ்சை நிமிர்த்தி நிற்கிறோமா அல்லது பிரச்சனைகளைக் கண்டு அழுது புலம்பி ஐயோ, ஐயோ என்று அலறுகிறவர்களாக இருக்கிறோமா? சொல்லுங்கள். தேவனுக்கடுத்த காரியங்களில் நாம் யாருக்கும் பயப்படக்கூடாது. கிறிஸ்து என்று வரும்போது, கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு உபதேசம் என்று வரும்போது, கிறிஸ்து கட்டின சபை என்று வரும்போது அதற்கு எதிராக நிற்பவர்கள் பெற்று வளர்த்த பெற்றோராக இருந்தாலும், ஊர் அறியக் கட்டிய கணவன், மனைவியாக இருந்தாலும், பாசம் கொட்டி வளர்த்த பிள்ளையாக இருந்தாலும், உயிருக்குயிராய் நேசிக்கும் நண்பனாக இருந்தாலும், ஊதியம் கொடுக்கும் முதலாளியாக இருந்தாலும் பயப்படக்கூடாது. இவர்களெல்லாரையும் காட்டிலும் தேவன் பெரியவர், கிறிஸ்து பெரியவர். கிறிஸ்துவின் உபதேசமும் அவருடைய சபையும் பெரியது. நாம் இவ்வுண்மையை புரிந்து, தடம்புரண்டுபோன நம் பக்தி வாழ்கையைத் தூக்கி நிறுத்தி, சரியான பாதையில் செலுத்துவோம்.

### III. கீழ்ப்படிதலின் ஆசீர்வாதத்தைப் புரிந்துகொள்ளாமல் போனார்கள் (14 : 6 - 9)

யோசுவா காலேப் போலல்லாமல் இந்தப் பத்துப்பேரின் வைராக்கியம் கூனிக் குறுகிப் போனதற்கான இன்னுமொரு காரணம் கீழ்ப்படிதலின் ஆசீர்வாதத்தைப் புரிந்துகொள்ளாமல் போனதைக் கூறலாம்.

கீழ்ப்படிதலின் முக்கியத்துவத்தை நாம் ஏதேன் தோட்டத்திலிருந்து பார்க்க முடியும். ஆதிப்பெற்றோர்களாகிய ஆதாமும், ஏவாளும் கீழ்ப்படியால் போனதின் விளைவை உலகம் இன்றளவும் அனுபவித்துக் கொண்டுள்ளது. ஆனாலும் கீழ்ப்படிதலின் மேன்மையை மானிடம் உணர்ந்ததாகவோ கீழ்ப்படிதலின் அவசியத்தைக் புரிந்துகொண்டதாகவோ தெரியவில்லை. குறிப்பாக, இஸ்ரவேல் ஜனங்களுக்கு எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து கிடைத்த விடுலை தங்கள் கீழ்ப்படிதல் மூலம் பெற்றுக்கொண்ட ஒன்றாக இல்லாமல் தேவனுடைய **பரிதாபத்தினால்** கிடைத்த ஒன்றாக இருந்தபடியால் (யாத்.3:7) கடைசிவரைக்கும் அவர்களால் கீழ்ப்படிதலின் சிறப்பை உணரமுடியாமல் போய் விட்டதோ?

சரி, எது எப்படியோ யோசுவாவும், காலேபும் தங்கள் பக்தியில் வைராக்கியம் காட்டி, கர்த்தர் சொன்னபடி செய்தால் அப்படியே நடக்கும் என்று நம்பி அதற்காகப் போராடியிருக்கிறார்கள். **கர்த்தர் நம்மேல் பிரியமாயிருந்தால் அந்தத் தேசத்திலே நம்மைக் கொண்டுபோய் பாலும் தேனும் ஓடுகிற அந்த தேசத்தை நமக்குக் கொடுப்பார் .**

**கர்த்தருக்கு விரோதமாக மாத்திரம் கலகம் பண்ணாதிருங்கள். அந்த தேசத்தின் ஜனங்களுக்கு நீங்கள் பயப்பட வேண்டியதில்லை . அவர்கள் நமக்கு இரையாவார்கள். அவர்களைக் காத்த நிழல் அவர்களைவிட்டு விலகிப்போயிற்று; கர்த்தர் நம்மோடே இருக்கிறார் அவர்களுக்குப் பயப்படவேண்டியதில்லை என்றார்கள்** (14 : 8 9).

நன்றாகக் கவனியுங்கள், **கர்த்தர்** நம்மேல் பிரியமாயிருந்தால் என்று உரக்கக் கூவினார்கள். அதாவது, கர்த்தரிடமிருந்து ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்கான சூத்திரம் அவருக்குப் பிரியமாயிருப்பது என்பது. இப்பேருண்மைக்கு தானியேல் தீர்க்கன் வாழும் சாட்சியாகத் திகழ்கிறார். **நீ மிகவும் பிரியமானவன் ஆதலால் நீ வேண்டிக்கொள்ளத் தொடங்கினபோதே கட்டளை வெளிப்பட்டது** என்றுள்ளது (தானியேல் 9 : 23 ) . அவருக்குப் பிரியமானவர்கள் வேண்டுவதைத் தர தேவன் நல்லவராகவும், வல்லராவும் இருக்கிறார். ஆனால், அவர் யாரில் பிரியமாயிருக்கிறார் என்பது கவனிக்க வேண்டிய ஒன்றாக உள்ளது . இக்கேள்விக்கு விடைகாண 1 சாமுவேல் 15 : 22 க்கு செல்லுவோம். **அதற்கு சாமுவேல் கர்த்தருடைய சத்தத்துக்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும் சர்வாங்க தகனங்களும் பலிகளும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்குமோ? பலியைப்பார்க்கிலும் கீழ்ப்படிதலும் ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப்பார்க்கிலும் செவிகொடுத்தலும் உத்தமம் என்றான்.** ஆக, கர்த்தருக்கு கீழ்ப்படிதல் மூலம் பிரியம் வருகிறது, பிரியம் ஆசீர்வாதம் பெற்றுத் தருகிறது.

இது இந்தப் பத்துப் பேருக்குப் புரியவில்லை . புரியாததால் பயம். பயம் தைரியத்தை இழக்கச் செய்கிறது. அதைரியம் வைராக்கியத்தை ஓட ஓட விரட்டுகிறது. விளைவு கூக்குரல் புலம்பல், அழுகை, முறுமுறுப்பு. இறுதியில் ஆசீர்வாத இழப்பு. இதுவா தேவனுக்கான வாழ்க்கை?! தேவனுக்கான வாழ்க்கை முற்றிலும் மாறுபட்டது ! இவ்வுண்மையைப் புரிந்து தேவனுக்கான வாழ்க்கையைப் பக்தியோடும், பயத்தோடும், வைராக்கியத்தோடும் நடத்துவோம்.

தேவன் தாமே உங்களனைவரையும் ஆசீர்வதிப்பாராக ! ஆமென் !! ●

**மன்றாட்டின் மூலம் வானத்திலிருந்து அக்கினியை வரவழைத்தவர்கள்**

1 . எலியா – ராஜா 18 : 37 , 38

2 . தாவீது – நாளா 21 : 25 , 26

3 . சாலொமோன் – நாளா 7 : 1

# ஆவியின் அளவுகள்

Bro. J.C. சோட்

**கி**றிஸ்துவைப் பற்றி அப்போஸ்தலர் யோவான் இவ்விதம் கூறினார். தேவனால் அனுப்பப்பட்டவர் தேவனுடைய வார்த்தைகளைப் பேசுகிறார் தேவன் தமது ஆவியை அளவில்லாமல் கொடுக்கிறார் (யோவான் 3:34) கிறிஸ்துவுக்கு ஆவியை அளவில்லாமல் தேவன் அளித்தார் என யோவான் குறிப்பிடும் போது அவர் என்ன அர்த்தத்தில் அவ்வாறு கூறினார்? அளவுக்கு வரம்பு உண்டு. வேறுவிதமாகக் கூறினால், ஆவியை கிறிஸ்துவுக்கு ஒரு அளவோடு மட்டும் தேவன் கொடுத்திருப்பாரேயானால் அந்த குறிப்பிட்ட வரம்பிற்குள்தான் ஆவியின் வல்லமையை அவர் பயன்படுத்தியிருக்க முடியும். ஆனால், தேவன் ஆவியை அவருக்கு அளவுடன் கொடுக்கவில்லை. மாறாக, அளவில்லாமல் கொடுத்தார். ஆவியின் வல்லமையை கிறிஸ்து உபயோகிக்கும் போது தேவனோ அல்லது ஆவியானவரோ இவருக்கு எந்தவிதக் கட்டுப்பாடுகளையும் விதிப்பதில்லை என்பதே அதற்குப் பொருள்.

தேவன் கிறிஸ்துவுக்கு ஆவியை அளவில்லாமல் கொடுத்தார் என்று சொல்லும்போது, மற்றவர்களுக்கு அளவுடன்தான் கொடுத்தார் எனக் கருத முடியும். ஆம், அப்போஸ்தலர்களுக்கும், அவர்கள் யார்மேல் கைகளை வைத்தார்களோ அவர்களுக்கும் மற்றும் எல்லா கிறிஸ்தவர்களுக்கும் அவரவர்களுக்கான அளவின்படியாகவே கொடுக்கப்பட்டது.

ஆவியானவரை அளவில்லாமல் பெற்றுக்கொண்ட கிறிஸ்து பிசாசுகளைத் துரத்தவும், மரித்தோரை எழுப்பவும், கடலின் புயலை அடக்கவும், தண்ணீரை இரசமாக்கவும், தண்ணீரின் மேல் நடக்கவும் இன்னும் இது போன்ற பல அற்புதங்களையும் செய்யக் கூடியவராக இருந்தார். இவை எல்லாவற்றிற்கும் மேலாக யோவான் எழுதியதைப் பாருங்கள். **இந்தப் புத்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையும் இயேசு தமது சீஷருக்கு முன்பாகச் செய்தார். இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும் படியாகவும் விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும்படியாகவும் இவைகள் எழுதப்பட்டிருக்கிறது** (யோவான் 20:30,31).

மேற்சொன்ன எல்லாவற்றையும் கடந்த ஓர் உண்மை என்னவென்றால், பரிசுத்த ஆவியானவரின் வல்லமையை பிறருக்கு அளிக்கும் அதிகாரத்தை இயேசு பெற்றிருந்தார் என்பதாகும். பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்கை அப்போஸ்தலர்களுக்குக் கொடுக்க அவரால் மட்டுமே முடிந்தது. குறிப்பிட்ட சீஷர்கள் பரிசுத்த ஆவியை பெற்றுக் கொள்ளும்படியாக அவர்களின் மீது கைகளை வைக்கும் வல்லமை மாத்திரமே அப்போஸ்தலர்களுக்குக் கொடுக்கப்பட்டது. ஆனால் அவர்கள் யாரையும் பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானப்படுத்த முடியவில்லை. அப்போஸ்தலர்கள் கைகளை வைத்ததால் வல்லமையைப் பெற்றுக் கொண்ட சீடர்கள் அதை மற்றவர்களுக்குக் கொடுக்க முடியவில்லை.

ஆவியானவரை அளவுடன் பெற்றவர்களை இங்கு நாம் பார்ப்போம். அப்போஸ்தலர்களிலிருந்து இன்றைய கிறிஸ்தவர்கள் வரையிலும் உள்ள சகல கர்த்தரின் பிள்ளைகளும் பரிசுத்த ஆவியானவரை திருமுழுக்கு அளவிற்கு பெற்றிருக்க வேண்டும் அல்லது பெற்றுக்கொள்ள வேண்டும் என பலர் இன்று நம்புகின்றனர். இது உண்மை அல்ல என்பதை இப்பொழுது நாம் காணப்போகிறோம். தேற்றரவாளன் அல்லது பரிசுத்த ஆவியானவரை அப்போஸ்தலர்களுக்கு மட்டும் அனுப்புவதாக இயேசு வாக்களித்திருந்தார் என்பதை முதலில் நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். அவரைப் பின்பற்றிய எல்லாருக்கும் இந்த வாக்குத்தத்தத்தை அவர் அளிக்கவில்லை. யோவான் புத்தகத்துக்கு நாம் திரும்பும்போது. அங்கே அப்போஸ்தலர்களிடம் பேசிய கர்த்தர் தான் அவர்களை விட்டு விலகிப் போவது பற்றியும் அவ்வாறு சென்றபின் தேற்றரவாளனை அவர்களிடம் அனுப்புவது பற்றியும் கூறுகிறார். அந்த தேற்றரவாளனே பரிசுத்த ஆவியானவர் என அடையாளம் காட்டப்படுகிறார் (யோவான் 14 : 26). கிறிஸ்து தொடர்ந்து கூறுவதைப் பார்ப்போம். பிதாவினிடத்திலிருந்து நான் உங்களுக்கு அனுப்பப் போகிறவரும் பிதாவினிடத்திலிருந்து புறப்படுகிறவருமாகிய சத்திய ஆவியான தேற்றரவாளன் வரும்போது அவர் என்னைக் குறித்துச் சாட்சி கொடுப்பார். நீங்களும் ஆதிமுதல் என்னுடனே இருந்தபடியால் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார் (யோவான் 15: 26, 27). மீண்டும் அவர் கூறுகிறார் **நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன். நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாக இருக்கும். நான் போகாதிருந்தால் தேற்றரறவாளன் உங்களிடத்தில் வரார்.நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்தில் அனுப்புவேன்.**(யோவான் 16:7). தொடர்ந்து சத்திய ஆவியாகிய அவர் வரும்போது சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார் அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல் தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார் என்றார் (யோவா 16 : 13). இப்போது மேற்சொன்ன வசனங்களில் கர்த்தர் யாருடன் பேசிக் கொண்டிருந்தார்?

இயேசு என்ன பேசிக்கொண்டிருந்தார் என நீங்கள் கவனித்து பார்த்தால், ஆரம்பத்திலிருந்தே அவருடன் கூட இருந்த அப்போஸ்தலர்களிடம் பேசிக் கொண்டிருந்தார் என்பது மிகத் தெளிவாகத் தெரியும் (யோவான் 15 : 27). அப்படியானால் கேள்வி இதுதான், கர்த்தர் தமது வாக்கை நிறைவேற்றினாரா?

இறுதியாக நடந்தது என்னவென்று நாம் காணும் முன்னர், தனது பரலோகத் தந்தையிடம் செல்லுவதற்கு முன்பு அப்போஸ்தலர்களிடம் நமது கர்த்தர் அறிவித்தவைகளை தயவு செய்து சிந்தித்துப் பாருங்கள். **என் பிதா வாக்குத்தத்தம் பண்ணினதை, இதோ நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள் என்றார்.** ( லூக் 24 : 49 ). லூக்கா மேலும் எழுதியிருக்கிறார். **தெயோப்பிலுவே, இயேசுவானவர் தாம் தெரிந்து கொண்ட அப்போஸ்தலருக்குப் பரிசுத்த ஆவியினாலே கட்டளையிட்ட பின்பு, அவர் எடுத்துக் கொள்ளப்பட்ட நாள் வரைக்கும் செய்யவும் உபதேசிக்கவும் தொடங்கின எல்லாவற்றையுங் குறித்து, முதலாம் பிரபந்தத்தை உண்டு பண்ணினேன். அவர் பாடுபட்ட பின்பு, நாற்பது நாளளவும் அப்போஸ்தலருக்குத் தரிசனமாகி, தேவனுடைய ராஜ்யத்துக்குரியவைகளை அவர்களுடன் பேசி, அநேகம் தெளிவான திருஷ்டாந்தங்களினாலே அவர்களுக்குத் தம்மை உயிரோடிருக்கிறவராகக் காண்பித்தார். அன்றியும், அவர் அவர்களுடனே கூடி வந்திருக்கும் போது, அவர்களை நோக்கி யோவான் ஜலத்தினாலே ஞானஸ்நானம் கொடுத்தான்; நீங்கள் சில நாளுக்குள்ளே பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள். ஆகையால், நீங்கள் எருசலேமை விட்டுப் போகாமல் என்னிடத்தில் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தம் நிறை வேறக் காத்திருங்கள் என்று கட்டளையிட்டார்** ( அப் 1 : 1-5 ). அதன்பின் இயேசு கூறினார். **பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும், எனக்கு சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்** (அப் 1: 8) . இந்த அறிக்கைகளிலிருந்து நிச்சயமாக இயேசு கிறிஸ்துவே பரிசுத்த ஆவியின் வல்லமையை அப்போஸ்தலர்களுக்கு வாக்களித்தார் என்பதை நாம் காணமுடியும். அது உண்மையாக இருக்கும்போது, அவ்வல்லமையைப் பெற்றவர்கள் யார்? அப்போஸ்தலர்கள் மட்டுமா அல்லது பொதுவில் எல்லா விசுவாசிகளுமா?

இப்போது, அப்போஸ்தலர் நடபடிகள் 2ம் அதிகாரத்திற்குத் திருப்பிக் கொண்டு என்னோடு வாசியுங்கள். **பெந்தெகொஸ்தே என்னும் நாள் வந்தபோது, அவர்களெல்லாரும் ஒருமனப்பட்டு ஓரிடத்தில் வந்திருந்தார்கள். அப்பொழுது பலத்த காற்று அடிக்கிற முழக்கம் போல வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழக்கமுண்டாகி, அவர்கள் உட்காந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று. அல்லாமலும், அக்கினிமயமான நாவுகள் போலப் பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு, அவர்கள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்தது. அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத் தொடங்கினார்கள்** ( அப் 2 : 1-4 ). அந்த அதிகாரத்தைப் படிக்கும்போது, அப்போஸ்தலர்கள் திரளான மக்களிடையே போதித்துக் கொண்டிருந்ததையும், அதிலே மூவாயிரம் பேர் வரை நற்செய்திக்குக் கீழ்ப்படிந்து, இரட்சிக்கப்பட்டு, சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர் என்றும் பார்க்கிறோம். தொடர்ந்து நாம் வாசிக்கையில் **எல்லாருக்கும் பயமுண்டாயிற்று அப்போஸ்தலர்களாலே அநேக அற்புதங்களும், அடையாளங்களும் செய்யப்பட்டது** (அப் 2 : 43) என உள்ளது.

ஆகவே, திருமுழுக்கு அளவிலான பரிசுத்த ஆவியை அப்போஸ்தலர்கள் மட்டுமே பெற்றுக் கொண்டனர் என்பதே இதன் முடிவாகும். ஆனால், அவர்கள் 12 பேர் மட்டுமே இருந்தனர்; செய்ய வேண்டிய பணியோ ஏராளமாக இருந்தது. அப்போஸ்தலர் நடபடிகள் 6ம் அதிகாரத்தில், பரிசுத்த ஆவியும், ஞானமும் நிறைந்து, நற்சாட்சி பெற்றிருக்கிற ஏழு பேரை சீடர்களிடமிருந்து தெரிந்து கொண்டு, அப்போஸ்தலர்கள் ஜெபம்பண்ணி அவர்களுக்கு அளித்தனர் என்று காண்கிறோம். ஆனால், இந்த மனிதர்கள் ஏற்கனவே பரிசுத்த ஆவியால் நிறைந்திருந்தனர் என்பதை நீங்கள் கவனிக்க வேண்டும். ஏற்கனவே, அவர்கள் பெற்றுக் கொண்டதற்கும், கைகளை வைத்து பரிசுத்த ஆவியின் அளவைப் பெற்றுக் கொண்டதற்கும் என்ன வித்தியாசம்? இந்த ஏழு பேரும் முன்பு பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பெற்றிருக்கவில்லை. ஆனால், கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தபோது, அற்புத அடையாளங்களைச் செய்ய முடியாத அளவிலான பரிசுத்த ஆவியைப் பெற்றிருந்தனர்.

கைகளை வைக்கும் அளவிலான பரிசுத்த ஆவியை அப்போஸ்தலர்கள் மட்டுமே அவர்களுக்குக் கொடுக்க முடிந்தது. அது ஒரு அற்புதங்கள் செய்யும் அளவிலான பரிசுத்த ஆவியாகும். இறுதியாக, இன்று ஒரே ஒரு அளவிலான பரிசுத்த ஆவியை மட்டுமே பெற்றுக் கொள்ள முடியும் என்பதை புரிந்து கொள்வோம். அது அற்புதங்கள் செய்ய இயலாத அளவிலான பரிசுத்த ஆவி. அது கர்த்தருக்குக் கீழ்ப்படியும் எல்லாருக்கும் கொடுக்கப்படும் பரிசுத்த ஆவி. ( அப் 2 : 38 ) இவை பற்றியும், இன்னும் அதிகமாகவும் நாம் தொடர்ந்து படிக்க உள்ளோம். ●

பெண்கள் பகுதி

# " என்னையன்றி வேறே தேவர்கள் உனக்கு உண்டாயிருக்க வேண்டாம் "

Sis. ரேச்சல் இராஜநாயகம்

யாத்திராகமம் 20:1,7 வசனங்களை வாசிக்கும்போது, அது கடுமையாக விக்கிரகாராதனையைக் கண்டிக்கிறது. தேவன் இப்படிப்பட்ட கட்டளைகளைக் கொடுத்திருந்தும் ஏதோ காரணத்தினாலே மனிதன் தேவ கட்டளையை மீறுகிறவனாகவே காணப்படுகிறான். ரோமர் 1:18-32 வசனங்களை வாசிக்கும்போது தேவனற்ற புறஜாதி தேசத்தினுடைய நிலை விவரிக்கப்படுகிறது. இதை வாசித்து அழுவதைத் தவிர வேறு வழியில்லை.

இஸ்ரவேல் ஜனங்கள் கானானுக்கள் பிரவேசிக்கும் போது எல்லா விக்கிரகங்களையும் அழித்துப் போடும்படியாய் தேவன் கட்டளை கொடுத்திருந்தார். தேவன் சொல்லியிருந்தும் ஜனங்கள் வெகுகாலம் வரைக்கும் அந்நிய தேவர்களை சேவித்தே வந்தார்கள். இவைகளின் விபரங்களைத் தெரிந்துகொள்ள பழைய ஏற்பாட்டை ஒருவர் வாசிப்பது அவசியம். அவர்களை ஆண்ட இராஜாக்களே மக்களை விக்கிரக ஆரதனைக்கு இழுத்துச் செல்லக் காரண காரணிகளாக இருந்துள்ளார்கள்.

அஸ்தரோத், மோளோகு, அப்பல்லோ, வீனஸ் இப்படி சொல்லிக்கொண்டே போகலாம். ஓவ்வொரு தேவைக்கும் ஒரு கடவுள் என்று வைத்து வழிபட்டுக் கொண்டிருந்தார்கள்.

நாம் விக்கிரகங்களை வைத்துக் கொண்டு இருக்கிறோமா? விக்கிரங்கள் நம்மை அழிவில் கொண்டுபோய் விட்டுவிடும். ஏனென்றால், நாம் யாரை தொழுது கொள்ளுகிறோமோ அதுபோலவே நாமும் ஆகிவிடுவோம்.

இன்றைய காலச் சூழ்நிலையில் நமக்கு தேவர்களாக இருப்பவை எவைகள்? **தொழில் நுட்பம்** என்ற கடவுள். எண்ணிலடங்கா மக்கள் இந்த கம்ப்யூட்டர், நவீன விஞ்ஞானம் போன்றவைகள் தங்களுடைய பிரச்சனகளைத் தீர்ப்பதற்கு போதுமானது என்று தீர்மானிக்கிறார்கள். ஆனால், அது தவறான ஒன்று. ஏன்? மனிதனுக்கு ஆவியும் மனசாட்சியும் இருப்பதால் இவனுக்கு பாவம் என்ற பிரச்சனையுள்ளது. எந்த கம்ப்யூட்டரும் இந்த பாவப்பிரச்சனையை தீர்க்க முடியாது. சுவிசேஷம் என்ற

தேவனுடைய வல்லமைதான் இந்தப் பிரச்சினயை தீர்க்க முடியும் (ரோமர் 1 : 16 மாற்கு 16 : 15, 16) ஒரு மனிதன் உலகம் முழுவதையும் ஆதாயம் பண்ணியும் தன் ஆத்துமாவை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் ஒன்னுமில்லை. எல்லாவற்றையும் இழந்து விடுகிறான் (மத் : 16 :26).

அடுத்து, **பொருளாசை** என்ற கடவுள். அந்தக் கடவுளையும் மக்கள் வணங்கிக் கொண்டுதான் இருக்கிறார்கள். எந்த மனுஷனும் இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்ய முடியாது . ஒருவனைப் பகைத்து மற்றொருவனை சிநேகிப்பான் . தேவனுக்கும் மனிதனுக்கும் ஊழியம் செய்ய முடியாது. ஒருவனுக்கு எவ்வளவு திரளான ஆஸ்தி இருந்தாலும் அது அவனுக்கு ஜீவன் அல்ல (லூக்கா 12 15). ஆக இதையும் நாம் ஆராதிக்க கூடாது.

மேலும், அநேகர் தங்களையே பெரிய கடவுள்போல் நினைத்து வழிபடுவார்கள். தங்களைத் தாங்களே மிகவும் நேசிப்பது மிகவும் தவறானது. நம்மைப் பற்றி நல்லதாக நினைப்பது தவறல்ல. ஆனால் உச்சத்தை எட்டுமளவு சுயபெருமை கூடாது (ரோமர் 12 : 1-3). மனிதன் கட்டாயமாக தெரிந்துகெள்ள வேண்டிய ஒன்று என்னவென்றால், தேவனும் இயேசு கிறிஸ்துவும் கிறிஸ்துவினுடைய சபையும் வேதாகமும் இல்லாமல் வாழ்ந்தால் மொத்தத்தில் அவன் எந்த உதவியும் இல்லாதவனாக எதையும் செய்யமுடியாதவனாவே இருக்கிறான்.

வேறு சிலர் **பலத்தை** கடவுளாக நினைத்து வழிபடுகிறார்கள் எனக்கு பலம் இருக்கிறது. நான் எதை வேண்டுமானாலும் செய்வேன் என்னை யாரும் எதுவும் செய்ய முடியாது என்று நினைத்துக் கொள்ளுகிறார்கள். எப்படியாவது பிறரைத் தங்கள் கட்டுபாட்டுக்குள் வைத்துக் கொள்ள வேண்டும். இதற்காகவே பொய் பேசுவது, திருடுவது உண்மையைப் பிரட்டுவது பொய் தோற்றத்தைக் கொடுப்பது எப்படியாவது ஏமாற்றி பிறர்மீது ஆதிக்கம் செலுத்துவது போன்ற காரியங்களை நாம் பர்த்துக் கொண்டுதான் உள்ளோம். புதிய ஏற்பாட்டில் தியோத்திரேப்பு இப்படித்தான் இருந்தான் (3 யோவான் 9 -11).

பிசாசு, இயேசு கிறிஸ்துவையே தன்னைப் பணிந்து ஆராதிக்கும்படி சொன்னான். ஆனால், நாம் விசுவாசிக்கிற, நமக்காக உயிர்த்தெழுந்த அன்பான இயேசு பிசாசுக்கு இடம் கொடாமல் தேவனுடைய வார்த்தையைக் கொண்டே விரட்டி, **உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்து கொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிக்கிறதே** என்றார்.

இதை வாசித்த அன்பான சகோதரிகளே! சிந்திப்போம். ஆத்ம பரிசோதனை செய்வோம். நாம் இதில் எந்த ரகம்? யாரை வணங்கிக் கொண்டிருக்கிறோம்? வேத வசனத்தை தவிர விலையுயர்ந்தது வேறு எதுவுமே இல்லை. அதை நம்முடையதாக்கிக் கொள்வோம். விடவேண்டியதை விட்டொழிப்போம். ஒரே தேவன், ஒரே குமாரன், ஒரே சபை, நம்மை நியாயந்தீர்க்கப் போவதும் இயேசுவின் போதனைகளே. இவைகளை மறந்து விடக்கூடாது. பரலோகம் சொந்தமாக வேண்டுமானால் வேதம் சொல்கிறபடி செய்வோம். தேடி வாசிப்போம். கீழ்ப்படிந்து வாழ்வோம். இப்போதைய தேவை இதுதான். தேவன் இதற்கு உதவி செய்வாராக! ஆமென்!

## நாளும் நடப்பும்

- 24 மணி நேரத்தில் பின் இணைப்பு மற்றும் மின்தடை குறித்த குறுந்தகவலுக்கு மின்சார நண்பன் என்ற திட்டமும் தொடக்கம் – அமைச்சர்
- நீட் தேர்வு முடிவுகளை வெளியிட உச்சநீதிமன்றம் அனுமதி.
- மீன்பிடி தடைக்கலாம் 61 நாட்கள் முடிவுக்கு வந்ததால் மீனவர்கள் மகிழ்ச்சி.
- இ – ஆதாரை அடையாள அட்டையாக ரயிலில் பயன்படுத்தலாம் – ரயில்வே நிர்வாகம்.
- பெட்ரோல் – டீசல் விலை நிர்ணய நேரம் இனி காலை 6 மணி – அமைச்சர்.
- தமிழகத்தில் எங்கும் பிளாஸ்டிக் அரிசி இல்லை – ஆய்வில் முடிவு.

வாலிபர் பகுதி

# நம் வாழ்வு தேவனுடைய ஈவு

சகோ. பென்னி மார்ட்டின்

**நா**ம் வாழ்கின்ற வாழ்க்கை தேவனால் நமக்கு கொடுக்கப்பட்ட ஈவு என்பதை பல நேரங்களில் நாம் மறந்து விடுகிறோம். இன்று பல வாலிபர்கள் வாழ்க்கையின் மதிப்பை உணராமல் அதைத் தங்கள் தவறான செயல்பாடுகளினால் சீரழித்துக் கொண்டிருக்கிறார்கள். சிலர் வாழ்க்கையே வெறுத்துவிட்டது என்று சொல்லி, அரைகுறை வாழ்க்கை வாழ்ந்து தேவனுடைய ஈவாகிய வாழ்க்கையை அர்த்தமற்றதாக, வியர்த்தமாக ஆக்குகிறார்கள். அருமையானவர்களே! தேவன் நமக்கு கொடுத்திருக்கிற வாழ்க்கை எவ்வளவு விலையேறப் பெற்றது என்பதை நாம் அறிந்து கொள்வோம்.

## I வாழ்க்கை தேவனுடைய வெகுமதி

அப்போஸ்தலனாகிய பவுல் அத்தேனே பட்டணத்து தத்துவ ஞானிகளிடம் பேசும்படி அழைக்கப்பட்டபோது, அவருக்கு கொடுக்கப்பட்ட வாய்ப்பைப் பயன்படுத்தி முக்கியமான காரியங்களை அவர்களுக்கு விளக்கிக்காட்டினார். பவுல் வாழ்க்கையின் ஆரம்பத்தை அவர்களிடம் வலியுறுத்தினார். மேலும், அவர் எல்லோருக்கும் ஜீவனையும், சுவாசத்தையும், சகலத்தையும் கொடுக்கிறவர் மெய்தேவனாகிய யெகோவா என்பதை மிக நம்பிக்கையாக உறுதிப்படுத்தினார் (அப்போஸ்தலர் 17 : 25). பின்பு இளம் ஊழியரான தீமோத்தேயுவுக்கு பவுல் எழுதும்போது எல்லவற்றையும் உயிரோடிருக்கச் செய்கிற தேவன் என்று நம் சிருஷ்டிகளை நினைவுபடுத்தினார் (I திமோத்தேயு 6 : 14). டார்வின் கொள்கை மனிதன் பரிணாம வளர்ச்சியில் குரங்கிலிருந்து வந்தான் என்று சொல்கிறது. அப்படியென்றால் மனிதன், பரிணாம வளர்ச்சியில் வேறொரு ஜீவராசியாக இந்நேரம் மாறியிருக்கவேண்டுமே, நாம் இன்றும் குரங்குகளை எல்லாம் பார்த்துக்கொண்டு தானே இருக்கிறோம். தேவனால் மனிதனாக படைக்கப்பட்டிருக்கிறான். மனிதன் மனிதனாகத்தான் இருக்கின்றான். மனிதன் தேவசாயலில் படைக்கப்பட்டிருக்கிறான். வேறெந்த சிருஷ்டியும் தேவசாயலில் படைக்கப்படவில்லை (ஆதியாகமம் 1 : 26,27). எனவே தான் ஒரு மனிதனுடைய உயிரை எடுக்கும் உரிமை மற்றொரு மனிதனுக்கு இல்லை. உயிர் அல்லது ஜீவன் பரலோகத்திலிருந்து தேவனால் நமக்கு கொடுக்கப்பட்ட வெகுமதி என்றும் உண்மையை நாம் ஆழ்ந்து சிந்திக்கும்போது மனிதன் இப்பூமியில் சிருஷ்டிக்கப்பட்டதின் நோக்கத்தை

சிந்திக்காமல் இருக்கவே முடியாது. ஏசாயா தீர்க்கதரிசி “ மனிதன் தேவ மகிமைக்கென்று சிருஷ்டிக்கப்பட்டான் என்று சொன்னார் (ஏசாயா 43 : 7) ”. அப்படியிருக்கும்போது ஏன் லட்சக்கணக்கான மக்கள் தங்களுக்கும் யெகோவாவுக்கும் சம்மந்தமில்லாதது போல் வாழ்கிறார்கள்? சாலொமோன் ஞானி தன் தள்ளாடும் வயதில் தான் இப்பூமியில் இருப்பதற்கான நோக்கத்தைத் தேடி ஆராய்ந்தார். அவர் தன் வாழ்க்கையைத் திரும்பி பார்க்கும்போது தன் இளவயதில் மகிழ்ச்சியைப் பெறுவதற்காக சில மதீயீனமான காரியங்களில் இறங்கியதை நினைத்து நொந்து போகிறார். சூரியனுக்கு கீழே வாழ்க்கையின் அர்த்தத்தை கண்டறிய அவர் எடுத்த முயற்சிகள் எல்லாம் தோல்வியில் போய் முடிந்தது. கடைசியாக, மனித வாழ்க்கையின் நோக்கம் தேவனுக்குப் பயந்து அவருடைய கைக்கொள்வதுதான் என்கிற முடிவுக்கு வந்தார் (பிரசங்கி 12 : 13 ) ; மனித இனம் வேறு எதிலும் திருப்தி அடையவே முடியாது. எனவே, பிரியமானவர்களே தேவனுடைய ஈவாகிய வாழ்க்கையை பொக்கிஷமாகக் கருதுங்கள். அதை உங்கள் சிருஷ்டிகரை மகிமைப்படுத்தப் பயன்படுத்துங்கள்; அதற்கான முயற்சியில் நீங்கள் ஈடுபடும் போது இம்மையிலும் மறுமையிலும் ஆசீர்வாதமான ஒன்றை கண்டடைவீர்கள்.

## II வாழ்க்கை என்பது ஒருமுறை அனுபவம்

நம்மை ஆழ்ந்து சிந்திக்க வைக்கும் வாழ்க்கையின் மற்றுமொரு நிலை ஒருவர் வாழ்க்கையை ஒருமுறைதான் வாழ்கிறார் என்பதாகும். அதாவது, நமக்கு இன்னொரு மனிதப் பிறவி இவ்வுலகில் கிடையாது. சில மதங்களில் போதிக்கப்படுவதுபோல் மறு அவதாரம் என்பதெல்லாம் இல்லை. மரணம் நம் வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் ஒன்றாக இருக்கிறது. இம்மரணமும்கூட மனிதனுடைய கலகத்தினால் ஏற்பட்ட விளைவுகள் தான் ( ரோமர் 5 : 12 ). மரணம் என்பது மனிதனுக்கு நிச்சயிக்கப்பட்டிருக்கிறபடியால் நாம் சாகும்போது தேவனுக்குப் பயந்து, அவருடைய கற்பனைகளை கைகொள்ளும்போது அடுத்த வாழ்க்கைக்கு அதாவது நித்திய ஜீவனை சுதந்தரிப்பதற்கு நம்மை நிச்சயப்படுத்திக் கொள்வோம். இப்பூமியில் நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிற வாழ்க்கை நாம் நித்தியத்திற்காக ஆயத்தப்படும்படியாகத்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. இஸ்ரவேலின் வடக்கு ராஜ்யம் தங்களுடைய இருதயங்களை இலகுவாக்க தேவன் கொடுத்த சிட்சைகளைக் கண்டுகொள்ளாமல் இருந்த போது, ஆமோஸ் தீர்க்கதரிசி அவர்கள் மேல் வரவிருக்கும் பயங்கரமான நியாயத் தீர்ப்பைக்குறித்து அவர்களை எச்சரித்தார். **இஸ்ரவேல் உன் தேவனைச் சந்திக்கும்படி ஆயத்தப்படு** ( ஆமோஸ் 4 : 12 ). நாம் இவ்வாழ்க்கை முடிந்து இனிவரும் உலகில் பரலோகத்தை அல்லது நரகத்தைத் தெரிந்தெடுப்பதற்கு ஓர் ஆயத்த களமாகத்தான் இப்பூமி இருக்கிறது.

நம்முடைய அருமை இரட்சகராகிய இயேசு கிறிஸ்து பத்து கன்னிகைகளைப் பற்றிய உவமையைச் சொன்னார். அவர்களில் ஐந்துபேர் புத்தியுள்ளவர்களென்றும் ஐந்து பேர் புத்தியில்லாதவர்களென்றும் சொன்னார். புத்தியுள்ள கன்னிகைகள் என்று இயேசு கிறிஸ்துவால் அழைக்கப்பட்டவர்கள் ஆயத்தமாயிருந்த கன்னிகைகளாயிருந்தார்கள். மீதமிருந்த புத்தியில்லாத கன்னிகைகள் ஆயத்தமில்லாதவர்களாயிருந்தார்கள் (மத்தேயு 55 : 1,13). தேவனுக்கும், மனிதனுக்கும் ஜென்மவிரோதியான பிசாசு மனித இனத்திற்கு இப்பொழுதிருந்தே ஆயத்தமாக வேண்டிய அவசியமில்லை, அதற்கு இன்னும் நாள் இருக்கிறது என்று மனித மனதில் வித்திட்டு நம்மை ஆயத்தமாகவிடாமல் முடக்கிப்போட்டிருக்கிறான். உதாரணமாக, கத்தோலிக்க உபதேசத்தின்படி இப்பூமியில் பாவம் செய்து தங்களை சுத்திகரித்துக் கொள்ள முடியாதவர்களின் ஆத்துமாக்கள் பரலோகம் போவதற்கு உதவியாக உத்தரிப்பு நிலையம் என்று ஓர் இடம் இருப்பதாகவும் அங்கே போய் அவர்கள் தங்களை முழுமையாக சுத்திகரித்து பரலோகம் போவதற்கு ஆயத்தமாக்கிக்கொள்ள முடியும் என்றும் ஓர் உபதேசம் உண்டு. ஆனால், வேதாகம உபதேசத்தின்படி இப்பூமியில் நித்தியத்திற்கு தங்களை ஆயத்தமாககாதவர்களுக்கு இரண்டாவது வாய்ப்பு கொடுக்கப்படும் என்று எங்குமே சொல்லப்படவேயில்லை. அதென்னவென்றால், இப்பூமியில் ஒருவர் தேவக்கட்டளையாகிய ஞானஸ்நானத்திற்கு கீழ்ப்படியவில்லையென்றால் அவருடைய இரட்சிப்பு அதோகதி அல்ல. அந்த நபருடைய மரணத்திற்குப்பின் கூட இப்பூமியில் இரட்சிப்பு உயிரோடிருக்கும் மற்றொருவர் அவருக்குப்பதிலாக ஞானஸ்நானம் பெற்றால் மரித்தவருக்கு இரட்சிப்பு கிடைக்கிறது என்று போதிக்கிறார்கள். ஆனால், அவைகளுக்கு ஆதாரமாக பூதக்கண்ணாடி வைத்து அவர்கள் தேடினாலும் வேதத்தில் எதையும் காணவே முடியாது.

இப்பூமியில் தேவனால் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற வாழ்க்கை விலையேறப்பெற்றது. அதன் மதிப்பை நாம் எப்போதும் உணரவேண்டும். அற்பமான காரியங்களுக்காக நாம் அதை வீணடிக்கவும் வேண்டாம். அது உங்கள் கையை விட்டு நழுவி உங்களை ஆயத்தமற்ற நிலையில் விட்டுவிட அனுமதிக்கவும் வேண்டாம். நம் வாழ்க்கை தேவனுடைய ஈவாக இருக்கிறபடியால் அதை அரைகுறையாக அல்ல, முழுமையாக தேவனுக்குப் பயந்து வாழ்ந்தால் என்றென்றும் அழிவே இல்லாத நித்திய வாழ்வை பரலோகில் தேவன் தந்திடுவார். நித்திய வாழ்வை சுதந்தரிக்க நீங்கள் எடுக்கும் எல்லா முயற்சிகளையும் தேவன் தாமே வாய்க்கச் செய்வராக ஆமென்! ●

சிறுவர் பகுதி

# யோசேப்போடு இருந்த தேவன்

Bro. ஏபில் நாயகம்

**எ**னக்குப் பிரியமான அன்பு குழந்தைகளே! உங்கள் யாவருக்கும் இயேசுவின் இன்ப நாமத்தில் வாழ்த்துக்கள். எல்லோரும் தேவனுடைய கிருபையினால் சுகமாக இருக்கிறீர்கள் என விசுவாசிக்கிறேன். புதிய கல்வி ஆண்டை ஆரம்பித்திருப்பீர்கள். புதிய வகுப்புகள், புதிய நண்பர்கள் என ஒரே அமர்க்களமாக நீங்கள் இருப்பீர்கள் என நம்புகிறேன். இந்தக் கல்வி ஆண்டு உங்களுக்கு சிறப்பான ஒன்றாக அமையவேண்டும் என நான் வாழ்த்துகிறேன்.

பிள்ளைகளே! பழைய ஏற்பாட்டின் முதல் புத்தகமாகிய ஆதியாகமத்தில் யோசேப்பு என்ற மனிதரைக் குறித்து நாம் வாசிக்க முடியும். அந்த மனிதன், பாவத்திற்கு விலகி, தேவனுக்குப் பயந்தவனாயிருந்தான். ஒரு முறை யோசேப்பு சிறையிலிருந்த போது, எகிப்து ராஜாவுக்கு பானபாத்திரக்காரனும், சுயம்பாகியும் எகிப்து ராஜாவாகிய தங்கள் ஆண்டவனுக்கு குற்றம் செய்தபடியால், அவர்களும் யோசேப்போடு சிறைச்சாலையில் வைக்கப்பட்டார்கள்.

எகிப்து ராஜாவுக்குப் பானபாத்திரக்காரனும் சுயம்பாகியும் இந்த இரண்டு பேரும் சிறைச்சாலையில் இருக்கும் போது, ஒரே இராத்திரியில் வெவ்வேறு பொருள் கொண்ட சொப்பனம் கண்டார்கள். அந்த சொப்பனத்தின் அர்த்தம் தெரியாததினாலே அவர்கள் கலங்கியிருந்தார்கள்.

யோசேப்பு அவர்கள் தங்களுக்கு வந்த சொப்பனத்தினாலே துக்கமாயிருக்கிறார்கள் என்று அறிந்து அவர்கள் இருவருடைய சொப்பனத்தையும் விளக்கிச் சொன்னான். யோசேப்பு சொன்னது போலவே அவர்கள் இருவருக்கும் சம்பவித்தது.

குழந்தைகளே! இப்படி சொப்பனங்களுக்கு அர்த்தம் சொல்லும் அறிவு யோசேப்புக்கு எப்படி கிடைத்தது? அவன் சிறையில் இருக்கும் போது இதை எப்படிச் செய்ய முடிந்தது? என்று வாசிக்கும் போது அடடா.... நமக்கும் இவ்வளவு அறிவும், திறமையும் இருந்தால் நன்றாயியிருக்குமே என்று நினைக்கத் தோன்றுகிறது அப்படித்தானே? ஓர் உண்மையை இங்கே தெரிந்து கொள்ளுங்கள் யோசேப்பு தன்னுடைய அறிவினாலே அதைச் செய்யவில்லை. 31ம் அதி 2 , 3 வசனங்களை வாசிக்கும் பொழுது, **கர்த்தர் யோசேப்போடு இருந்தார்** எனவும் **அவன் செய்கிற யாவையும் வாய்க்கப் பண்ணுகிறார்** என்றும் வாசிக்கிறோம். 21 வது வசனத்தில் **கர்த்தரே யோசேப்போடே இருந்து அவன் மேல் கிருபை வைத்து** என்று எழுதப்பட்டிருக்கிறது. எல்லா அறிவுக்கும் காரணம் கர்த்தர்தான்.

ஆம் குழந்தைகளே! தேவன் யோசேப்போடே இருந்தார். அதினாலே தான் யோசேப்பினாலே இந்தக் காரியங்களை சாதிக்க முடிந்தது. நமக்கும் தேவனுடைய கிருபை வேண்டுமானால், நம் செயல்களை தேவன் வாய்க்கப் பண்ணவேண்டுமானால், நாம் யோசேப்பை போல தேவனுக்குப் பயந்து நடக்க வேண்டும்.

யோசேப்பு செய்த காரியம் என்னவென்றால், அவன் தேவனுக்கு பிரியமாக வாழ்ந்தான். அதுமட்டுமல்ல, அவன் பாவமான காரியங்களைவிட்டு ஓடிப்போனான். எனவே, நீங்களும் யோசேப்பைப் போல வாழ்ந்து, தேவனுக்கு பிரியமாக நடந்து கொள்வீர்களானால், உங்களைக் கொண்டு பெரிய காரியங்களைச் செய்ய தேவன் வல்லவராய் இருக்கிறார். ஆமென்.

## பாடல் பாடின ஐந்து பெண்கள் வேதத்தில்

**1. மிரியாம் – யாத் 15 : 20 – 22**

**2. தெபோராள் – நியா 5 : 1 – 31**

**3. அன்னாள் – I சாமு 2 : 1 – 10**

**4. எலிசபெத் – லூக்கா 1 : 4 – 45**

**5. மரியாள் – லூக்கா 1 : 45 – 55**

# வேத வினா போட்டி

பதிலளிப்போர் கவனத்திற்கு

**கீழ்க்கண்ட கேள்விகளுக்கு வேதவசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் அடுத்த மாதம் 10 ம் தேதிக்குள் திருமறை ஆசான் முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழுமுகவரியுடன் அலைபேசி எண்ணையும் தவறாமல் எழுதி அனுப்பவும். (இதற்கான விடை ஜுலை மாத இதழில்)**

1. யாத்திராகமத்தில் உள்ள அதிகாரங்களும், வசனங்களும் எத்தனை?
2. முற்பிதாக்களுக்கு தேவன் என்ன நாமத்தினால் அறியப்படவில்லை?
3. அம்ராம், யோகெபேத் என்பவர்கள் யார்?
4. மோசே கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்து சொன்னது என்ன?
5. இஸ்ரவேல் புத்திரர் மோசேக்கு ஏன் செவிகொடாமற் போனார்கள்?
6. மொத்த வாதைகள் எத்தனை? மந்திரவாதிகள் செய்தது எத்தனை?
7. மந்திரவாதிகள் பார்வோனிடம் தேவன் பற்றி சொன்னது என்ன?
8. ஏழாவது வாதை என்ன?
9. பார்வோன் என்ன சொல்லி மோசேயை எச்சரித்தான்?
10. கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை எப்படிப் புறப்பட பண்ணனார்?

## மே மாத வினாக்களுக்கான விடைகள்

1. சமாதான கர்த்தர் ( ஆதி. 49 : 10 )
2. ரூபன் ( ஆதி. 42 : 22 )
3. இரண்டு தரம் ( ஆதி. 41 : 5 )
4. ஏழு ( ஆதி. 41 : 54 )
5. எழுபது பேர் ( யாத். 1 : 5 )
6. பித்தோம், ராமசேஸ் ( யாத். 1 : 11 )
7. ஜலத்தினின்று எடுக்கப்பட்டவன் ( யாத். 2 : 10 )
8. தகப்பன் ரெகுவேல், கணவன் மோசே ( யாத். 2 : 18,21 )
9. மோசேயின் குமாரன் ( யாத். 2 : 22 )
10. வெறுமையாய் ( யாத். 3 : 21 )

## சரியான பதில் எழுதியவர்கள்

1 . சாலொமோன் தனம் - காங்கயம்
2 . ஜான்சிராணி - கிருபாகரன் - காங்கயம்
3 . முத்துசாமி - சேலம்
4 . இளவரசி - சேலம்
5 . அருள்ராஜ் - சென்னை
6 . சுந்திரமணி - திருபத்தூர்
7 . ஜெபதாய் - நாசரேத்
8 . மாலதி ஜெயசெல்வம் - சீர்காழி
9 . பழனிவேல் - சேலம்
10 . சபிதா - சேலம்
11 . ஜெப ஸ்டீபன் - ஈரோடு
12 . ரம்யா - சேலம்
13 . பால்ராஜ் - மதுரை
14 . ஜான்சி - ஆனைமலை
15 . குளோரி திலகவதி - ஈரோடு
16 . எஸ்தர் ஸ்ரீதர் - சென்னை
17 . சாமுவேல் மோகன்தாஸ் - சென்னை
18 . ஜெயமணி ஜெயபாண்டியன் - கோண்டூர்
19 . நிறைமதி - சென்னை
20 . ஜெமீலா - நெல்லை
21 . பாக்கியம் சம்பூரணம் - ஈரோடு
22 . ஜெயராஜ் (Tr) - பொள்ளாச்சி
23 . ஜரின்லீனா - குண்டூர்
24 . ராஜேந்திரன் - கோபி
25 . சந்திராள் - கோபி
26 . மெர்ஸி ரூபஸ் - சேலம்

# வேதாகம கேள்வி - பதில்

**கேள்வி :** ஒருவர் இரட்சிக்கப்பட கிறிஸ்துவின் சபையில் அங்கத்தினராக இருப்பது அவசியமா? அல்லது ஒருவர் மற்ற மார்க்கப் பிரிவினை சபைகளுள் ஒன்றில் இருந்தால் கூட இரட்சிக்கப்பட முடியுமா?

**பதில் :** உண்மையாகவே, ஒருவர் இரட்சிக்கப்பட வேண்டுமென்றால் அவர் கிறிஸ்துவின் சபையில் அங்கத்தினராக இருக்க வேண்டும். ஏனென்றால், அந்த **சபைக்காகத்தான்** இயேசு தன் ஜீவனையே விட்டார். இயேசு, தான் ஒரு சபையைக் கட்டுவதாகச் சொன்னார் ( மத்தேயு 16 : 18 ). அப்போஸ்தலருடைய நடபடிகள் இரண்டாம் அதிகாரத்தில் **சபை ஸ்தாபிக்கப்பட்டதை** நாம் வாசிக்கிறோம். அந்த சபை அவருடைய சரீரமாயிருக்கிறது என்று எபேசியர் 1 : 22 , 23 வசனங்களில் பவுல் சொன்னார். பின்பு எபேசியர் 4 : 4ல் அவர், **ஒரே சரீரம்** தான் இருக்கிறது என்று சொல்கிறார். இந்த ஒரே சரீரத்திற்குள்ளாக அதாவது, இந்த ஒரே சபைக்குள்ளாக ஒரே ஆவியின் வழி நடத்துதலினாலே சத்தியத்தின்படி **ஞானஸ்நானம்** பண்ணப்படவேண்டும் (I கொரி 12 : 13). ஆவியின் வழி நடத்துதல் தேவனுடைய வார்த்தையினால் தான் உண்டாகிறது. ஏனென்றால், அந்த தேவனுடைய வார்த்தை தான் ஒருவர் அந்த ஒன்றான சபையில் எப்படி பிரவேசிக்கிறார் என்று சொல்கிறது. அப்போஸ்தலருடைய நடபடிகள் இரண்டாம் அதிகாரத்தில் பெந்தெகொஸ்தே நாளில் அவனுடைய வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றைய தினம் ஏறக்குறைய மூவாயிரம் பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள் ( வ 41 ) இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அனுதினமும் சபையிலே ( தம்முடைய சபையிலே ) சேர்த்துக்கொண்டு வந்தார் ( வ 47 ). விசுவாசித்த ஜனங்கள் மனந்திரும்பி, பாவமன்னிப்பிற்கென்று ஞானஸ்நானம் பெற்றார்கள் (அப். 2 : 38) அதன் பின்பு கிறிஸ்து கட்டின சபையில் அவர்கள் சேர்க்கப்பட்டார்கள். அவர்கள் 600 வருடங்களுக்குப் பிறகு ஸ்தாபிக்கப்பட்ட கத்தோலிக்க சபையில் சேர்க்கப்படவில்லை அல்லது பதினைந்தாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும், அதன் பின்பும் ஸ்தாபிக்கப்பட்ட வேறு எந்த மார்க்கப்பிரிவினைச் சபைகளிலும் அவர்கள் சேர்க்கப்படவில்லை. **பெந்தேகோஸ்தே நாளில் இரட்சிக்கப்பட்ட** எல்லோருமே **கிறிஸ்துவின் சபையில் தான்** அங்கத்தினர்களாக இருந்தார்கள்! ●

# மனுஷருடைய வழிகள்

Bro. பாண்டியன்

ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் உங்களுக்குச் சமாதானம் உண்டாவதாக. சரியான வழியில் மனிதன் நடப்பது இயல்பாக வருவதில்லை. அப்படி அவன் பாதை தவறும் போது அவன் மனதுக்கு இளைப்பாறுதல் கிடைப்பதில்லை. ஆனால், மனிதன் போகும் பாதை அவன் பார்வைக்கு சரியாக இருக்கிறது. அதைப்பற்றி ஞானியாகிய சாலமோன் கூறும் போது, **மனுஷனுக்கு செம்மையாய்த் தோன்றுகின்ற வழிகள் உண்டு! அதின் முடிவோ மரணவழிகள்** (நீதி 14 : 12) என்கிறார். நான் என் மனசாட்சிபடி நடப்பவன் என்று சிலர் பெருமை பேசுவதுண்டு. ஆனால், **எல்லாவற்றைப் பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகாக் கேடுள்ளதுமாயிருக்கிறது** என்கிறது வேதம். மனுஷனுக்கு அவன் இருதயத்திற்குள்ளிருந்து புறப்படுகிறவைகளே தீட்டுப்படுத்துகிறது என்று ஆண்டவர் இயேசுவும் எடுத்துச் சொன்னார். எனவேதான் கிறிஸ்துவின் உபதேசத்தினால் நம் இருதயத்தைச் சுத்தப்படுத்த வேண்டும் என்று புதிய ஏற்பாடு போதிக்கிறது. பழைய ஏற்பாட்டில் எரேமியா 6 : 16-ல் **வழிகளிலே நின்று பூர்வபாதைகள் எவை என்று கேட்டு விசாரித்து நல்லவழி எங்கே என்று பார்த்து அதிலே நடவுங்கள். அப்பொழுது உங்கள் ஆத்துமாவுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார். அவர்கள் அதிலே நடக்கமாட்டோம் என்றார்கள். நம்முடைய சமாதானத்திற்காக தேவன் சொல்லும் ஆலோசனையை மனிதன் மதிக்கவில்லை. அதனால் அவனுக்கு இளைப்பாறுதலும் இல்லாமற் போயிற்று** என்று காண்கிறோம்.

நிம்மதிக்காகக் குடிக்கிறேன் என்கிற சிலர், அதில் மூழ்கி மரித்துப் போவதைப் பார்க்கிறோம். தேவசித்தப்படி வாழவேண்டிய மணவாழ்க்கையை சிலர் மீறி நிம்மதி இழந்து தவிக்கிறார்கள். இப்படி மனுஷனுடைய வழிகள் மரணவழிகளாகவே இருக்கிறது. மனிதனிடம் காண்கிற சில தவறான வழிகளை வேதத்திலிருந்து காணலாம்.

### 1. மாறுபாடான வழிகள்

பிலேயாம் தேவனுடைய வார்த்தையை மீறி இஸ்ரவேல் ஜனங்களைச் சபிக்கச் சென்ற போது கர்த்தருடைய தூதனானவர் அவனைக் கண்டித்துச் சொன்னது **உன் வழி எனக்கு மாறுபாடாய் இருக்கிறதினால் நான் உனக்கு எதிராகப் புறப்பட்டு வந்தேன்** என்கிறார் ( எண் 22 : 32 ).

அவன் அநீதத்தின் கூலியை விரும்பி, தன் அக்கிரமத்தினிமித்தம் கடிந்து கொள்ளப்பட்டான் என்று பேதுரு தன் நிருபத்தில் குறிப்பிட்டார். பணத்திற்கு முதலிடம் கொடுத்து தேவனுடைய சத்தியத்தை மாற்றுகிறவர்களின் வழி மாறுபாடானதாயிருக்கிறது. லஞ்சம் பெறுவதைப்பற்றி ஏசாயா 1 : 23 ல் பிரபுக்கள் பரிதானத்தை விரும்பிக் கைக்கூலியை நாடித் திரிகிறார்கள் என்று பார்க்கிறோம். தேவனுக்கு பயந்து நடக்கும் போது **மாறுபாடான பாதைகளிலும் கோணலான வழிகளிலும் நடக்கிறவர்களுக்கு நீ தப்புவிக்கப்படுவாய்** (நீதி 2 : 15)

## 2 . பக்கவழி

பெண் தீர்க்கதரிசியும், நியாயாதிபதியுமான தெபோராள் காலத்தில் இஸ்ரவேல் ஜனம் மெய்யான தேவனை விட்டு நூதன தேவர்களைத் தெரித்து கொண்டார்கள். அதைப் பற்றி வேதம், **பெரும்பாதைகள் பாழாய்க் கிடந்தது வழி நடக்கிறவர்கள் பக்க வழியாய் நடந்தார்கள்** என்கிறது ( நியாயா 5 : 6 ). தேவனுடைய வார்த்தைப்படி நடவாமல் வேதத்தை பின்பற்றுகிறோம் என்று இன்றைக்கும் வாரத்தின் முதலாம் நாள் செய்ய வேண்டிய ஆராதனையை ஓய்வு நாளைப் பின்பற்றுகிறோம் என்றுச் சொல்ல சனிக்கிழமை சிலர் ஆராதிக்கிறார்கள். விருத்தசேதனத்தைக் கட்டாயமாக்கின சிலரை பவுல் கடிந்து **அவர்கள் பக்கவழியாய் நுழைந்த கள்ளச் சகோதரர்கள்** என்று குறிப்பிடுகிறார். ( கலாத் 2 : 4 ) பரிசுத்தமில்லாமல் தேவனை தரிசிக்க முடியாது என்று வேதம் கூறுகிறது. ஆனால் சிலர் தேவக்கிருபையை காம விகாரத்துக்கு ஏதுவாகப்புரட்டி, ஆண்டவரை மறுதலிக்கிற பக்கவழியாய் நுழைந்த பக்தியற்றவர்கள் என்று யூதா 4ம் வசனத்தில் எச்சரிக்கிறார்.

## 3 . வழி ஓரங்கள்

தாவீதின் மூன்றாம் மகன் அப்சலோம், பிற்காலத்தில் தான் ராஜாவாக வேண்டி பட்டணத்திற்கு போகிற வழி ஓரத்தில் நின்று ஜனங்களைத் தன் வயப்படுத்தினான் என்று காண்கிறோம் (2 சாமு 15 : 2,3). சரியான வழியில் போய்க் கொண்டிருக்கிற அப்பாவிகளை தன் சுயநலத்திற்காக திசைதிருப்பிக் கெடுக்கிறவர்களைக் குறிப்பிட **வழி ஓரங்கள்** பயன்படுத்தப்படுகிறது. எரேமியா 3 : 2ல் வேசித்தனம் பண்ணுகிறதற்காக வழி ஓரங்களில் நின்ற பெண்ணின் உவமை சொல்லப்பட்டுள்ளது. இஸ்ரவேல் ஜனம் விக்கிரக ஆராதனையால் தேசம் தீட்டுப்பட்டது பற்றி இது சொல்லப்பட்டுள்ளது. மேலும் நீதிமொழிகள் 7 : 27ல் அவள் வீடு பாதாளத்திற்குப் போகும் வழி என்றும், அது மரண அறைகளுக்குள் ( பிணவறை ) கொண்டுபோய்விடும் என்று எச்சரிப்பாகச் சொல்லப்பட்டுள்ளது.

### 4. சறுக்கலான வழி

தாவீது தன்னைத் துன்பப்படுத்திய எதிரிகள் தண்டிக்கப்பட ஜெபித்த போது, **அவர்களுடைய வழி இருளும் சறுக்கலுமாயிருப்பதாக** என்கிறார் ( சங் 35 : 6 ) தேசம் விபச்சாரக்காரரால் நிறைந்து சாபத்தால் துக்கப்பட்டது.... ஆதலால் அவர்கள் வழி இருட்டிலே சறுக்கலான வழியாய் இருக்கும் என்கிறது எரேமியா 23 : 10 – 12. எனவே, யாரும் தவறான வழியில் முன்னேறி வாழவே முடியாது என வேதம் வெளிப்படுத்துகிறது.

### 5. சோம்பேறியின் வழி

சோம்பேறியின் வழி முள்வேலிக்குச் சமானம், நீதிமானுடைய வழியோ ராஜபாதை என்கிறது நீதி 15 : 19. சோம்பலானது ஒருவன் சேரவேண்டிய இடத்திற்கு அவனைக்கொண்டுபோகத் தடையாக இருக்கிறது. அவன் தான் சம்பாதித்தப் பொருட்களையும் இழக்க நேரிடும். அவசரத்திற்கு உதவி கேட்டாலும் சோம்பேறிக்குக் கிடைக்காது. அப்படிப்பட்டவன் தான் உண்மையான அறிவாளிகளைவிட தானே அதிக ஞானமுள்ளவன் என்று நினைத்துக் கொள்வான் என்று நீதிமொழிகள் 26 : 16 ல் காண்கிறோம். அப்படிப்பட்டவனை புத்திச்சொல்லித் திருத்துவது கடினம்.

### 6. பைத்தியமான வழி

மனிதர் இக்காலத்தில் பணத்தின் மூலம் எதையும் சாதிக்கலாம் என்று நினைத்துக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால், ஒரு ஆத்துமாவை மீட்கும் பொருளாக தேவனுக்கு அதைக் கொடுக்க முடியாது. மேலும், தான் ஒரு நாள் மரிப்போம் என்பதை மறந்து ஆஸ்திகளைச் சேர்த்து அதில் மகிழ்ச்சியாய் இருப்பவனை, அது பைத்தியமான வழி என்கிறது வேதம் (சங் 49 : 8 – 13).

ஆகவே, மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழிகள் மரண வழிகளாகத்தான் இருக்கிறது. ஆனால், தேவனுடைய வழி அப்படிப்பட்டதல்ல! தேவன் தமது வார்த்தைகளின் மூலமாகவே ஒருவனை போதித்து வழி நடத்துகிறார். பிரயோஜனமாய் இருக்கிறதை உனக்குப் போதித்து, நீ நடக்கவேண்டிய வழியிலே உன்னை நடத்துகிற உன் தேவனாகிய கர்த்தர் நானே என்கிறார். இவ்வுலகில் அநேக போதனைகள் கிடைத்தாலும் அது வேதத்தைப் போல பிரயோஜனமாய் இருக்க வாய்ப்பில்லை. எனவே, ஞானி சொல்கிறான் **உன் சுயபுத்தியின் மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து, உன் வழிகளில் எல்லாம் அவரை நினைத்துக்கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செம்மைப்படுத்துவார்** ( நீதி 3 : 5 , 6 ). எதுவரை

நடத்துவார் என்ற கேள்விக்கு அவர் நம் மரண பரியந்தமும் நம்மை நடத்துவார் என்கிறான் சங்கீதக்காரன். ஆண்டவர் இயேசு இவ்வுலகத்தாரின் வழியைப் பற்றி எடுத்து சொல்லும் போது, அது கேட்டுக்கு போகிற விசாலமான வழி அல்லது வாசல் என்கிறார். நாம் ஜீவனுக்குப் போகிற இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசிக்க முற்படவேண்டும். ஒரு மனிதன் தேவனிடம் வந்து சேர வேண்டுமானால் அதற்கு நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாய் இருக்கிறேன் என இயேசு கூறுகிறார். இஸ்ரவேல் ஜனங்களை எகிப்திலிருந்து மீட்டு கானானக்கு அழைத்துச் சென்ற தேவன் அவர்கள் பயப்படாதபடிக்கு பத்திரமாய் வழி நடத்தினார் என்று காண்கிறோம். ( சங் 78 : 53 ) தேவனுடைய வழி உத்தமமாய் இருக்கிறது. தம்மை நம்புகிறவர்களுக்கு அவர் கேடகமாய் இருக்கிறார். ஆனால், மனுஷர் **வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து, நித்திய வழியிலே என்னை நடத்தும்** ( சங் 139 : 24 ) என்று ஜெபிக்க வேண்டும். மனுஷனுடைய வழிகள் அவனாலே ஆகிறதல்ல என்றும் தன் நடைகளை நடத்துவது நடக்கிறவனாலே ஆகிறதல்ல என்றும் எரேமியா சுட்டிக்காட்டுகிறார் (எரேமி 10 : 23 ). ஆகவே, நம் வழிகளைச் சோதித்து அறிந்து கர்த்தரிடத்தில் திரும்புவோம். தேவக்கிருபை நம்மனைவரோடும் இருப்பதாக. ஆமென்.

## ஐந்து விதமான பிறப்பு வேதத்தில்

1. மண்ணிலிருந்து ஆதாம் (ஆதி. 3 : 19)

2. எலும்பிலிருந்து ஏவாள் (ஆதி. 2 : 22)

3. ஆண், பெண்ணிலிருந்து குழந்தை (ஆதி. 4 : 1)

4. கன்னியிடமிருந்து இயேசு (மத். 1 : 18)

5. ஜலந்திலிருந்து மறுபிறப்பு (மாற் 16 : 16)

# கிறிஸ்தவனின் சிறந்த கடமை கீழ்ப்படிதல்

Bro. Glenn Colley

இந்நாட்களில் சபையில் மூப்பர் அல்லது கண்காணிப் பொறுப்பில் இருப்பவர்களின் அதிகாரம் பற்றி அதிகமாக விவாதம் நடந்து கொண்டு இருக்கிறது. சிலர் மூப்பர்களுக்கு அதிகாரம் எதுவுமில்லை. அவர்களுடைய தலைமைத்துவம் சிறந்த முன் மாதிரியை ஏற்படுத்துவதற்குத்தான் பொருந்தும் என்று நம்புகிறார்கள். வேறு சிலர் மூப்பர்கள் தாங்கள் கண்காணிகளாக இருக்கும் சபையில் அங்கத்தினர்களின் ஆவிக்குரிய நலன் சம்மந்தமான முடிவுகளை எடுக்கும் அதிகாரம் மூப்பர்களுக்கு உண்டு என்று நம்புகிறார்கள். மேலும், சபை அங்கத்தினர்கள் மூப்பர்களின் தலைமைத்துவம் தேவனுடைய வார்த்தையோடு முரண்பாடாத வரை அதற்கு கீழ்ப்படிய கடமைப்பட்டிருக்கிறார்கள் என்று நம்புகிறார்கள்.

இந்தப் பாடத்தைப் பற்றி நீங்கள் ஆழ்ந்து யோசிக்கும்படியாக அநேக வசனப்பகுதிகள் காத்திருகின்றன. (I தீமோத் 3 : 1 - 7 ; தீத்து 1 : 5 - 11; அப் 20 : 28 ; I பேதுரு 5 : 1 - 4). நீங்கள் எபி. 13 : 17 யையும் பரிசீலனை செய்து பார்க்கும்படியாக கேட்டுக்கொள்கிறோம். **உங்களை நடத்துகிறவர்கள், உங்கள் ஆத்துமாக்களுக்காக உத்தரவாதம் பண்ணுகிறவர்களாய் விழித்திருக்கிறவர்களானபடியால், அவர்கள் துக்கத்தோடே அல்ல, சந்தோஷத்தோடே அதைச் செய்யும்படி அவர்களுக்கு கீழ்ப்படிந்து அடங்குங்கள்; அவர்கள் துக்கத்தோடே அப்படிச் செய்தால் அது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கமாட்டாதே**. நாம் ஏதோ ஒருவருக்கு கீழ்ப்படிய வேண்டும் என கட்டளையிடப்பட்டிருப்பதை இந்த வசனத்திலிருந்து நாம் அறிகிறோம். இந்த வசனப்பகுதி சபையின் மூப்பர்களுக்கு கீழ்ப்படிவதைக் குறித்துப் போதித்தால் நேர்மையான இருதயங்களில் மூப்பர்களின் அதிகாரம் சம்மந்தமான குழப்பங்கள் என்றென்றும் இல்லாதபடித் தீர்த்து வைக்கப்படும்.

இங்கே, கீழ்ப்படிதல் என்கிற வார்த்தை கிரேக்கப் பதமான **பெய்தோ** என்னும் வார்த்தையிலிருந்து வந்திருக்கிறது. தேயர் அகராதியின்படி **கட்டுதல்** என்று பொருள்படும். இந்த வசனப்பகுதியில் குறிப்பாக இதைக் கவனித்தல், கீழ்ப்படிதல், இணங்குதல், ஒத்திருத்தல் போன்ற பொருட்களைக் கொடுக்கும்.

ஆனால், இந்த வசனப் பகுதியின்படி கீழ்ப்படிய நாம் யார்? நம்மை நடத்துகிறவர்களும் நம் ஆத்துமாக்களுக்கு உத்தரவாதம் பண்ணுகிறவர்களும் யார்? நம்மை நடத்துகிறவர்களைப் பற்றி எபி.13 ஆம் அதிகாரத்தில் மேலும் இரண்டு வசனங்களில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

**தேவ வசனத்தை உங்களுக்குப் போதித்து உங்களை நடத்தினவர்களை நீங்கள் நினைத்து, அவர்களுடைய நடக்கையின் முடிவை நன்றாய்ச் சிந்தித்து, அவர்களுடைய விசுவாசத்தைப் பின்பற்றுங்கள்**( வச. 7 );**உங்களை நடத்துகிறவர்களையும், பரிசுத்தவான்கள் யாவரையும் வாழ்த்துங்கள்** (வச. 24).

அப் . 20 : 28ல் எபேசு பட்டணத்து மூப்பர்களுக்கு புத்திமதி சொல்லும் போது இவ்விதமாகச் சொல்கிறார். **ஆகையால் உங்களைக் குறித்தும் தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக் கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங் குறித்தும் எச்சரிக்கையாயிருங்கள்'.** மூப்பர்கள் சரியாக கண்காணிகள் என்று சொல்லப்பட்டுள்ளது, மற்றவர்களால் செய்யப்படும் வேலைகள் சரியான முறையில் செய்யப்படுகிறதா என்று கண்காணிக்கும் பொறுப்பு மூப்பர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. புதிய ஏற்பாட்டு சபையில் மூப்பர்கள் அவ்விதமாகத் தான் விவரிக்கப்படுகிறார்கள்.

மூப்பர்கள் மந்தைக்கு மாதிரியாக இருப்பதன் மூலம் வழிநடத்தினாலும் (I பேதுரு 5 : 3) அவர்கள் கண்காணிகளாக இருந்தும் நம்மை வழி நடத்துகிறார்கள். மந்தையில் அங்கத்தினர்களாக இருக்கும் நாம் அவர்களுக்குக் கீழ்ப்படிய வேண்டும். இந்தப் போதனைக்கு விதிவிலக்காக நாம் நடந்து கொள்வது தேவனுடைய வார்த்தைக்கு முரண்பட்டதாயிருக்கும் ( அப் 5 : 29 ). மந்தைக்கு கண்காணிகளாக இருக்கும் சபையின் மூப்பர்களைத் தான் என்று வேதம் தெளிவாகக் குறிப்பிடுகிறது.

தேவபக்தியுள்ள மூப்பர்களுக்காக நாம் தேவனுக்கு நன்றி சொல்ல வேண்டும். நம்மை நடத்துகிறவர்களை நினைக்கும் தாழ்மையுள்ள கிறிஸ்தவர்களாக இருப்போமாக ( எபி 13 : 7 ). நாம் அவர்களுக்கு கீழ்ப்படிந்து அடங்குவோமாக (வச. 17). ஒரு நாளில் அந்த எக்காள சத்தம் முழங்கும் போதும் பிரதான மேய்ப்பனாகிய கிறிஸ்து வரும் போதும் அவர் விட்டு சென்ற மந்தையை எப்படிக் கண்காணித்தார்கள் என்பதைப் பற்றி மூப்பர்கள் அவரிடம் கணக்கொப்புவிக்கவேண்டும் ( I பேதுரு 5 : 4 ). எனவே, மூப்பர் தங்கள் பணியைத் திறம்பட செய்ய நாம் அவர்களுக்குத் தோல் கொடுப்போமாக. அப்போது அவர்கள் துக்கத்தோடே அல்ல, சந்தோஷத்தோடே அதைச் செய்ய முடியும். ●

| **முகம் பிரகாசித்த மூன்று பேர் வேதத்தில்** | |
|---|---|
| | 1 . மோசே - யாத் 35 : 28 - 30 |
| | 2 . இயேசு - மத் 17 : 2 |
| | 3 . ஸ்தேவான் - அப் 6 : 25 ; 7 : 55 , 56 |

# சுவிசேஷ இணை

Bro. Randal Matheny

“ ஒற்றுமைக்காக வேற்றுமை ” என்கிற கொள்கை உலகத்திலும், குடும்பத்திலும், சபையிலும் சமமாக வேலை செய்கிறது. “ வேற்றுமை ஆனால், ஒற்றுமை ” அல்லது “ வேற்றுமையில் ஒற்றுமை ” போன்ற சொற்றொடர்கள் இந்த கொள்கையைப் புரிந்து கொள்ளாததையே நமக்குக் காட்டுகின்றன. ஒற்றுமை ஏற்பட வேண்டும் என்ற நோக்கில் தான் தேவன் வேற்றுமையை உண்டாக்கினார்.

இந்த உலகம் ஒற்றுமை என்கிற எண்ணத்தையே மறந்து விட்ட படியால், வேற்றுமையை வலியுறுத்தி வருகிறது. ஆணுக்கும், பெண்ணுக்கும் இடையில் மகளிர் இயக்கங்கள் பெண்ணுரிமைகளையும், சமத்துவத்தையும் மிகைப்படுத்தி வருகின்றன. இது, ஒடுக்கப்பட்டோர் ஒடுக்குவோர் மீது எடுக்கும் நடவடிக்கையாகும்.

இந்த சூழ்நிலையில், இங்கே ஒரு தம்பதியினரைப் பார்த்து நாம் உற்சாக மடைகிறோம். அவர்கள் வீட்டில் அதிகாரத்திற்காக சண்டையிடாமல், தேவனுடைய ராஜ்யத்தின் நலனிற்காக ஒருவருக்கொருவர் ஒத்துழைப்பு கொடுத்தார்கள். ஆக்கில்லா, பிரிஸ்கில்லாள் தம்பதியினர் ஒருங்கிணைந்து கர்த்தருக்காக வேலை செய்தபடியால் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டு, தொடர்ந்து கர்த்தருடைய வேலையைச் செய்யும்படியாக அனுமதிக்கப்பட்டார்கள்.

## கொரிந்துவில் பவுலை ஏற்றுக் கொள்ளுதல்

அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்து பட்டணத்திற்கு வரும் போது இந்தத் தம்பதியினரை நாம் முதன் முதலாகப் பார்க்கிறோம் (அப். 18 : 1 – 2) அவர்கள் அரச ஆணையின்படியே மற்றயூதர்களோடே ரோமாபுரியிலிருந்து துர்த்திவிடப்பட்டார்கள். அவர்கள் கொரிந்து பட்டணத்திற்கு வந்து அங்கே கூடாரத் தொழில் செய்து வந்தார்கள். பவுலும் அதே தொழிலைச் செய்து அவர்களோடு தங்கினார். அப்போஸ்தலனாகிய பவுல் உங்கள் வீட்டில் தங்குவதாக கற்பனை செய்து பாருங்கள்! அங்கே தங்கியிருந்த போது, பவுல் தரிசனங்களைக் கண்டார். (அப். 18 : 9 , 10).

ஆக்கில்லாவும், பிரிஸ்கில்லாளும் பவுலின் எபேசுக்கு வந்தபோது, அவனுக்கு அதுகாறும் தெரியாமலிருந்த அவசியமான வேதாகம உண்மைகளை ஆக்கில்லாவும், பிரிஸ்கில்லாளும் அவனுக்கு அறிவித்தார்கள். அதுமட்டுமல்ல " ஆக்கில்லாவும், பிரிஸ்கில்லாளும் அவன் பேசுகிறதைக் கேட்டு, அவனைச் சேர்த்துக் கொண்டு, தேவனுடைய மார்க்கத்தை அதிக திட்டமாய் அவனுக்கு விவரித்துக் காண்பித்தார்கள் " ( அப். 18 : 26 ). அவர்கள் இருவரும் பவுலோடு இருந்து தேவனுடைய சித்தத்தைக் கற்றுக்கொள்ளும் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டார்கள். இப்போது இவர்களால் மற்றவர்களுக்குப் போதிக்க முடியும். தீமோ. 2 : 2ல் பவுல் தீமோத்தேயுவிற்கு என்ன சிபாரிசு செய்தாரே அதைத் தானும் பயன்படுத்தினார்).பின்பு அப்பொல்லோ அகாயா நாட்டிற்குப் போகவேண்டுமென்றிருக்கையில், " சீஷர்கள் அவனை ஏற்றுக் கொள்ளும்படி ஆக்கில்லாவும், பிரிஸ்கில்லாளும் அவர்களுக்கு எழுதினார்கள். அப்பொல்லோ அங்கே வந்த பின்பு கிருபையினாலே விசுவாசிகளானவர்களுக்கு மிகவும் உதவியாயிருந்தான் " (அப். 18 : 27).

பின்பு பவுல் எபேசுக்குத் திரும்புகிறார். அங்கேயிருந்து அவர் 1 கொரிந்தியர் நிருபத்தை எழுதினார். ஆக்கில்லாவும், பிரிஸ்கில்லாளும் கொரிந்து சபைக்கு வாழ்த்துதல்களை அனுப்பினார்கள்: " ஆக்கில்லாவும், பிரிஸ்கில்லாளும் தங்கள் வீட்டிலே கூடுகிற சபையோடுங்கூடக் கர்த்தருக்குள் உங்களை மிகவும் வாழ்த்துகிறார்கள் " ( 1 கொரி. 16 : 19 ). அவர்கள் அநேக சீஷர்களுக்கு கூட்டங்களை நடத்த தங்கள் வீடுகளை திறந்து வைத்தார்கள். அவர்களுடைய உபசரிப்பும், ஆவிக்குரிய வேலைக்காக கொடுக்கும் ஆசையும் அநேக வழிகளில் சகோதரர்களுக்குத் தங்களை அர்ப்பணிக்கக் காரணங்களாக அமைந்தன.

## ரோமாபுரிக்குத் திரும்புதல் :

பவுல் ரோமாபுரியாருக்கு கடிதங்களை எழுதினபோது ஆக்கில்லாவும், பிரிஸ்கில்லாளும் ரோமாபுரியில் இருந்தார்கள். அவர்களுக்குப் பவுல் இவ்விதமாக வாழ்த்துதல் அனுப்புகிறார். **கிறிஸ்து இயேசுவுக்குள் என் உடன்வேலையாட்களாகிய பிரிஸ்கில்லாவையும், ஆக்கில்லாவையும் வாழ்த்துங்கள், அவர்கள் என் பிராணனுக்காகத் தங்கள் கழுத்தைக் கொடுத்தவர்கள். அவர்களைப் பற்றி நான் மாத்திரமல்ல, புறஜாதியாரில் உண்டான சபையாரெல்லாரும் நன்றியறிதலுள்ளவர்களாயிருக்கிறார்கள்** (ரோமர் 16 : 3 , 4).

இவ்விருவரும் தேவனுடைய ஊழியமாகிய சுவிசேஷத்தைப் பல தேசங்களுக்கு எடுத்துச் செல்லும் பணியில் தங்கள் உயிரைக் கூடப் பெரிதாக நினைக்கவில்லை ( அநேகமாக அப். 18 ஆம் அதிகாரத்தில் கொரிந்துவில் இருந்திருக்கலாம் ). தேவனுடைய ராஜ்யத்தில் அவர்கள் வகித்த முக்கியப் பங்கை பவுல் நன்றியோடு அங்கீகரிக்கிறார்.

இங்கே இந்த தம்பதியினர் பற்றிக் குறிப்பிடுவதன் மூலம், அவர்கள் ரோமாபுரியிலும் செய்து வருகின்ற முக்கிய வேலையின் மதிப்பை அங்கீகரிக்கிறார். இவ்விருவரும் ஆவிக்குரிய நோக்கங்களுக்காக ரோமாபுரிக்குத் திரும்பும் அவசியத்தை உணர்ந்துதிருக்கிறார்கள். அவர்கள் கிறிஸ்தவர்களாக ரோமாபுரியை விட்டுச் சென்றார்களா அல்லது கொரிந்துவிலே பவுலால் மனமாற்றம் செய்யப்பட்டார்களா என்பது நமக்குத் தெரியாது. ஆனாலும், ரோமர்களுக்கு முதல் முறையாக சுவிசேஷத்தை அறிவிக்கவோ அல்லது ராயனுடைய கட்டளையால் தடைபட்டிருந்த தங்காளல் தொடங்கப்பட்ட வேலையை முடிக்கவோ ரோமாபுரிக்குத் திரும்பியிருக்கலாம்.

## மறுபடியும் எபேசுவில்

பவுல் தன் ஊழியத்தின் கடைசியில், எபேசுவில் ஊழியம் செய்து கொண்டிருந்த தீமோத்தேயுவிற்கு, இரண்டாவது நிருபத்தை எழுதுகிறார். மறுபடியும், அந்த பட்டணத்தில் ஆக்கில்லாவையும், பிரிஸ்கில்லாவையும் நாம் காண்கிறோம். “ பிரிஸ்கில்லாளுக்கும், ஆக்கில்லாவுக்கும், ஒநேசிப்போருவின் வீட்டாருக்கும் என் வாழ்த்துதலைச் சொல்லு ” (தீமோத். 4 : 19 ). ஒருவேளை, பவுல் அவர்களை தீமோத்தேயுவுடன் இணைந்து வேலை செய்யும்படி எபேசுவுக்கு அனுப்பியிருக்கலாம். இருந்தபோதிலும், அவர்கள் கிறிஸ்துவுக்கு சேவை செய்வதற்காக ஒருமுறை அல்ல, பலமுறை ஒரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் சென்றிருக்கிறார்கள். அவர்கள், தங்களோடு இணைந்து ஊழியம் செய்கின்ற மற்ற சகோதரர்களுடன் சேர்ந்து அந்த சாம்ராஜ்யம் முழுவதும் சுறுசுறுப்பான வேலையாட்களைக் கொண்ட ஓர் ஆவிக்குரிய கூட்டமைப்பை உருவாக்கினார்கள்.

ஆக்கில்லா, பிரிஸ்கில்லாளுடைய பெயர்கள் 6 முறை மேற் கோள்காட்டப்பட்டிருக்கிறது. அதில், பிரிஸ்கில்லாளுடைய பெயர் 4 முறை தன் கணவனுடைய பெயருக்கு முன்பாக மேற்கோள் காட்டப்பட்டிருக்கிறது. வேத அறிஞர்கள் பிரிஸ்கில்லாள், ஆக்கில்லாவை விட சுறுசுறுப்புடன் செயல்படுகிற கிறிஸ்தவளாக இருந்திருக்கலாம் என யூகிக்கிறார்கள். இன்னும் சிலர், ஆக்கில்லாவை விட பிரிஸ்கில்லாள் உயர் வகுப்பைச் சேர்ந்த பிரஜையாக இருந்திருக்கலாம் என்றும், ஒரு சிலர் பிரிஸ்கில்லா சபையில் எல்லோராலும் அறியப்பட்டிருக்கலாம் என்றும் கருதுகின்றனர்.

பெயர் வரிசை அடிப்படையிலான யூகம், ஒன்றிற்கு மற்றொன்றை விட முக்கியத்துவம் கொடுக்க நமக்குக் காரணமாக அமைகிறது. இருப்பினும், இவர்கள் தங்கள் நோக்கத்தில் ஒற்றுமையாயிருந்து, ராஜ்யத்தின் வளர்ச்சிக்காகக் கடுமையாகப் பாடுபட்டார்கள் என்பதை இவர்களது வாழ்க்கையில் காணமுடிகிறது. அவர்கள் கிறிஸ்துவுக்காகவும், சகோதரருடைய தேவைகளுக்காகவும் தங்களையே கொடுக்க விருப்பமுள்ளவர்களாயிருந்தார்கள்.

## அவர்களைப் போன்றவர்களைப் பெருக்கினார்கள்!

கர்த்தருக்கென்றும், கர்த்தருடைய வேலைக்கென்றும் தங்களை முழுமையாக அர்ப்பணித்த இந்த தம்பதியினர் எவ்வளவு ஆச்சரியமானவர்கள்! ராஜ்யத்திற்காக அவர்கள் எவ்வளவு செய்திருக்கிறார்கள்! அவர்கள் எவ்வளவு ஊழியம் செய்திருக்கிறார்கள்! புதிய ஊழியப் பணிகளைத் தொடங்கினார்கள், உபசரித்திருக்கிறார்கள், ஆவிக்குரிய நோக்கங்களுக்காக பலமுறை இடம் பெயர்ந்திருக்கிறார்கள், கடினமான வேளைகளைக் கடந்து வந்த அவர்களை நாம் பின்பற்ற வேண்டும் எனக் காட்டியிருக்கிறார்கள், அனுபவமிக்கவர்களிடமிருந்து கற்றுக் கொண்டிருக்கிறார்கள், குறைவான அனுபவமிக்கவர்களுக்கு போதித்திருக்கிறார்கள், அவர்களை திருத்தியிருக்கிறார்கள், சுவிசேஷப் பயணங்களை உற்சாகப்படுத்தியிருக்கிறார்கள். இவைகள் எல்லாவற்றையும் விட, ஆவிக்குரிய வேலையை நிறைவேற்ற பூமிக்குரிய வேலையை செய்திருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட அர்ப்பணிப்பு பணியை எடுத்துச் செய்வதற்கு, இவர்களைப் போன்ற பல தம்பதியினரின் வாழ்க்கையில் கர்த்தர் கிரியைச் செய்வாராக. உரிமைகள் பற்றி தற்கால விமர்சகர்கள் சொல்வதையெல்லாம் ஒதுக்கிவைத்து விட்டு, நம் கீழ்ப்படிதலுக்கும், நம் துதிக்கும், நம் நன்றிக்கும் கர்த்தர் பாத்திரராயிருக்கிறபடியால் நாம் கணவன் மனைவியாக முழு இருதயத்தோடும், ஆத்துமாவோடும், அர்ப்பணித்து ஆக்கில்லா, பிரிஸ்கில்லா போன்ற ஊழியத்தில் ஒருமைப்பட்டுச் செயல்படுவோமாக! ●

### இயேசுவின் அழைப்பு

**அப்பொழுது ராஜா தமது வலது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக் கொள்ளுங்கள். பசியாயிருந்தேன், எனக்குப் போஜனங் கொடுத்தீர்கள்; தாகமாயிருந்தேன் என் தாகத்தை தீர்த்தீர்கள்; அந்நியனாயிருந்தேன் என்னைச் சேர்த்துக் கொண்டீர்கள் (மத். 25 : 34 , 35 ).**